BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN 2703-8440




ஓவியம்: Manisha Gunaratne

Bergen Tamilsk Avis - no.17/18 - June/July 2022 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.17/18 ஆனி/ஆடி 2022

*வணக்கம்!*

*2022 மாசி மாதம் ஆரம்பமாகிய ரஷ்யா - உக்ரைன் யுத்தம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இரு நாடுகளும் மிகப்பெரும் அளவில் தாக்குதல்களை நடாத்திய வண்ணமே உள்ளனர். இருதரப்பிலும் பெரும் சேதங்கள், பெரும் இழப்புக்கள். அழிந்து கொண்டு இருக்கும் உயிர்களும் உடமைகளும் ஏராளம். ரஷ்யா மிகப்பெரிய வல்லரசாக இருப்பினும் உக்ரைன் நாட்டிலிருந்தும் அவர்களது படையினர் உக்கிரமான எதிர்த்தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். 30 அங்கத்துவ நாடுகளை உள்ளடக்கிய* NATO (North Treaty Organization) *நாடுகள் உக்ரைனுக்கு பல்வேறு வகையான ஆயுதங்களை வழங்கி வருகிறன. நேட்டோ நாடுகளில் ஒன்றான நோர்வேயும் தனது பங்கிற்கு ஆயுதங்களை வழங்கியுள்ளது. நேட்டோ நாடுகளின் ஆதரவினால் உக்ரைனும் பலத்த தாக்குதல்களை நடாத்திக் கொண்டே இருக்கிறது.*

*உலகின் பல்வேறு நாடுகளிடையே போராட்டங்கள் நடைபெறும் கட்டங்களில் நோர்வே போன்ற நாடுகள் தலையிட்டு சமாதான உடன்படிக்கையும், தீர்வுகளையும் முன்னெடுப்பது வழக்கம். ஆனால் தற்போதைய யுத்தத்தில் நோர்வே ஒரு பக்க சார்ப்பாக ஆயுத உதவிகளைப் புரிந்து வருவது தவிர்க்க முடியாதது போல கூறப்படுகிறது.*

*நடைபெறும் உக்கிர யுத்தத்தினால் ஐரோப்பிய நாடுகளில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுள்ளது. அத்துடன் பொருட்களின் விலையேற்றமும் அதிகரித்துள்ளது.*

*இந்த யுத்தத்தின் பாதிப்பு அண்டை நாடுகளில் மட்டுமல்ல தொலைவிலுள்ள நமது தாய் நாட்டையும் பாதித்துள்ளது எனத் தோன்றுகிறது.*

*சிறிலங்காவில் அண்மைக் காலமாக நடந்தேறிவரும் பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு, குறிப்பாக எரிபொருள் இன்மை போன்றவை மட்டுமல்ல, நாட்டில் தலைதூக்கி நிற்கும் அரசியல் குழப்பங்கள் அனைத்துமே மக்களை மிகவும் நெருக்கடியான சூழலுள் தள்ளியுள்ளது.*

*எமது யுத்த காலங்களில் சிங்கள அரசால் எமது தமிழ் மக்கள் சந்தித்த பல இடர்களை தற்போது சிங்கள மக்களும் அதே அரசால் சந்திக்கின்றனர். அரசின் நேர்மையற்ற ஆட்சிக்கு எதிரான மக்களின் ஜனநாயக வழியிலான போராட்டங்கள் மற்றும் எழுச்சி ஆர்ப்பாட்டங்கள் பாதுகாப்புப் படையினரால் தடுக்கப்பட்டு வருகின்றது. போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் படையினரால் கடுமையாக தாக்கப்படுகின்றனர். கைது செய்யப்படுகின்றனர். மக்கள் மட்டுமல்ல ஊடகவியலாளர்களும் கடுமையாக தாக்கப்பட்டு வதைக்கப்படும் செய்திகள் பல உண்டு. மனித உரிமைகளை மதிக்காத எந்த அரசும் நீண்ட காலம் அரசாள முடியாது. அதற்கு தற்போதைய போராட்டம் மிகவும் சிறந்த உதாரணமாகும்.*

*சிறி லங்காவின் இன்றைய சூழலில் டீசல், பெற்றோல், எண்ணெய் போன்றவற்றின் பற்றாக் குறையினால் நாடு முழுவதும் முற்றாக முடங்கி விட்டது. கல்வியிலிருந்து அனைத்துத் தொழில் வளங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. சிங்கள மற்றும் தமிழ் மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்த காலத்தில் இவ்வாறான பாதிப்புக்களை, பொருளாதாரத் தடைகளை தமிழ் மக்கள் பெரிதும் சந்தித்திருந்தாலும் அவற்றுக்கு ஈடு கொடுத்து வாழ்ந்திருந்தாலும், இன்றைய சூழலில் சந்திக்கின்ற அன்றாட சவால்கள் மிகவும் மோசமான வாழ்வுப் போராட்டத்தைக் கொடுத்துள்ளது. அதற்கான காரணருக்கு எதிரான போராட்டம் பெரிய அளவில் முக்கிய இடங்களிலெல்லாம் முன்னெடுக்கப்படுகிறது. அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் சிங்கள மக்களே அதிகம் ஈடுபட்டுப் போராடி வருகின்றனர். இப்போராட்டத்தில் தமிழ் மக்களின் பங்கு என்ன? அவர்களுக்கும் இப்போராட்டத்துக்கும் சம்மந்தம் இல்லையா? எதற்காக தமிழர்கள் மௌனமாக உள்ளார்கள்? தமிழர்கள் பாதிப்படையவில்லையா? ஏன் இந்த மௌனம்? போன்ற கேள்விகள் உலக அரசியல் அவதானிகளிடம் எழுந்துள்ளது. இதற்கு தாயகம் வாழ் தமிழ் உறவுகளே விடை கூற வேண்டும்.*

*உறவுகளே! கடந்த யூன் மாதம் கோடை கால விடுமுறையினை முன்னிட்டு நமது "தேன் தமிழிதழ்" வெளிவரவில்லை. எனவே இம்முறை யூன், யூலை மாதங்களின் கோடைகால சிறப்பிதழாக இம்மலரை தருவதில் மகிழ்வடைகிறோம்.*

Ansvarlig redaktør: Julius Antoni

ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி - தொலைபேசி எண்: (47) 924 63 674

## இலங்கைப் பாராளுமன்றம்



இலங்கைப் பாராளுமன்றம் எப்போதும் மக்களுடைய விடுதலைக்காக - நியாயத்துக்காக இயங்கிய மரபைக் கொண்டதல்ல.
மலையக மக்களை நாடற்றவராக்கியது தொடக்கம் அது மேற்கொண்ட ஒடுக்குமுறைச் சட்டங்களும் புறக்கணிப்புத் தீர்மானங்களும் ஏராளம். இந்த வளர்ச்சி அப்படியே கட்சியின் நலன், தலைவர்களின் நலன், தனி நபரின் நலன் என்று சுருங்கியது வரலாறு. அதாவது மக்கள் நலன், அவர்களுடைய பாதுகாப்பு, சமூகப் பேணுகை என்பதை விட (கட்சி, அதன் தலைமை என) தனிப்பட்ட நலன்களின் அடிப்படையிலேயே மாறித் தொழிற்பட்டது. (இதற்காக இவர்கள் வெட்கப்பட வேண்டும்)
இப்பொழுதும் அதுவே நிகழ்கிறது. மக்களுடைய உரிமைகளையும், நியாயங்களையும் முன்னிலைப்படுத்திப் போராடுவோருக்கு எதிராக சட்டங்களாலும் தீர்மானங்களாலும் ஒடுக்குமுறையை மேற்கொள்வதாக. இது மேலும் நெருக்கடியை உண்டாக்குமே தவிர சுமுக நிலையையோ முன்னேற்றத்தையோ தராது. ஆனாலும் இந்தப் பாராளுமன்றத் தலைமைகள் மிக உறுதியாகவும் தெளிவாகவும் இருப்பது எத்தகைய எதிர்ப்பையும் (அது மக்கள் எழுச்சிப் போராட்டங்களாக இருக்கலாம், ஆயுதப் போராட்டங்களாக இருக்கலாம் எதையும்) தம்மால் ஒடுக்க முடியும். அதை முறியடிக்க முடியும். அதை வெற்றி கொள்ள முடியும் என்று. கடந்த காலத்தில் இதைச் செய்த வெற்றி அனுபவங்கள் அவர்களுக்குண்டு. இந்த நம்பிக்கையில், இந்தத் திமிரில்தான் இப்பொழுதும் நடந்து கொள்கிறார்கள். ஆக ஒடுக்குவோருக்கு - அதிகாரத் தரப்பினருக்கு உரியதாகவே இந்தப் பாராளுமன்றம் உள்ளது. அதன் சட்டவாக்கமும் அதைப் பிரயோகமாக நிலைப்படுத்தும் பிற (சட்ட, நீதி, படை) கட்டமைப்பும் உள்ளது.
மக்கள் இதைப் புரிந்து கொள்ளாத வரையில் கற்பிக்கப்படும் ஜனநாயக ஏமாற்றில் தோல்வியடைந்து கொண்டே இருக்க வேண்டியதுதான்.

-கருணாகரன்-







### நோய்த்தொற்று எச்சரிக்கை!

சுவாச நோய்த்தொற்று அல்லது கொரோனா வைரஸ் தொற்று போன்ற அறிகுறிகள் அதாவது தலைவலி, மூக்கடைப்பு, காய்ச்சல், இருமல், தொண்டைப் புண் மற்றும் பலவீனமான நிலை போன்றன ஏற்படின் நீங்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். உடல் நலம் பெறும்வரை வீட்டிலேயே இருத்தல் நல்லது. உங்கள் சொந்த உடல்நலம் அல்லது உங்கள் குழந்தைகளின் உடல்நிலை பலவீனமாகின் உங்கள் மருத்துவரை அணுகுங்கள்.
சுவாச நோய்த்தொற்றுகளால் அதிகம் நோய்குள்ளாகும் அபாயம் உள்ளவர்களுடன் தொடர்பைத் தவிர்க்கவும்.
குழந்தைகள் மற்றும் முதியவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை தவிர்க்கவும்.

# மாயக்குதிரை மரக்குதிரையானதோ?

**-கருணாகரன்-**



இலங்கையில் எதிர்பார்க்கப்பட்டது அடிப்படை மாற்றம். அதற்காகவே ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் மக்கள் திரண்டு போராடினார்கள். ஆனால் நிகழ்ந்திருப்பதோ தலைகீழ் மாற்றம். இப்பொழுது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நாட்டிலேயே இல்லாமல் விரட்டப்பட்டிருக்கிறார். மக்களால் நிராகரிக்கப்பட்ட மனிதர் ஜனாதிபதியாக அதிகாரத்தில் ஏற்றப்பட்டிருக்கிறார். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கும் கட்சிக்கு தலைமைப் பொறுப்புகள் ஏதுமில்லை. உதிரிக்கட்சிகளும் தோற்கடிக்கப்பட்ட தரப்பும் அதிகாரத்தில் உட்கார்ந்திருக்கின்றன.

மக்கள் தீர்ப்பு, மகேசன் தீர்ப்பு எல்லாமே குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டு விட்டன. அரசியல் விபத்துகளே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இதனால் யார் யாருக்கெல்லாமே அதிர்ஸ்டம் அடிக்கிறது. அதில் ஒண்ணாம் நம்பர் ஆள் ரணில் விக்கிரமசிங்க. இரண்டு மாதத்துள் இரண்டு அதிர்ஸ்டம் (வெள்ளித்திசை) அடித்திருக்கிறது விக்கிரமசிங்கவுக்கு. முதலில் பிரதமர் பதவி. அடுத்து ஜனாதிபதிக் கதிரை. ஆளுக்கு லக்கினத்தில் சூரியன் என்கிறார்கள். ஆனால் நாட்டு மக்கள் அனைவருக்கும் லக்கினத்தில் சனியன். அதனால் அவர்கள் தெருவிலே க்யூவில் நிற்கிறார்கள். இருளில் (மின்வெட்டு) கிடக்கிறார்கள்.

நாடு பணவீக்கத்தில் சுருண்டு கொண்டிருக்கிறது. நாளொரு வண்ணம் பொழுதொரு மேனி என்று பொருட்களின் விலை செட்டை கட்டி உயரப் பறக்கிறது. ஆனால், அரசாங்கமோ மூன்று மாதங்களுக்குள் நான்கு அமைச்சரவை மாற்றங்களைச் செய்துள்ளது. இதை நீங்கள் வாசிக்கும்போது இன்னொரு புதிய அமைச்சரவை உருவாக்கப்பட்டிருக்கக் கூடும். அதற்கான முயற்சிகள் - பேச்சுகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. பொறுப்புள்ள ஆட்சியாளர்கள் அல்லவா! மக்களுக்கு என்ன கிடைக்கிறதோ இல்லையோ புதிது புதிதாக அமைச்சரவையை உரு வாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதென்ன எத்தனை தடவை அமைச்சரவை மாற்றங்கள் நடந்தாலும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மட்டும் திரும்பத்திரும்ப கடற்றொழில் அமைச்சுத் தவறாமல் கிடைக்கிறதே என்று யாரும் கேட்டு விடாதீர்கள்.
அது தமிழர்களின் யோகம். அமைச்சரவை மட்டுமல்ல இரண்டு மாதங்களுக்குள் இரண்டு ஜனாதிபதிகளை நாடு கண்டிருக்கிறது. இரண்டு பிரதமர்களை மக்கள் பார்த்திருக்கிறார்கள். இன்னும் என்னென்ன அதிசயத்தை எல்லாம் காண வேண்டி வருமோ என்று சனங்கள் யோசிக்கிறார்கள்.

ஆட்கள் மாறுகிறார்கள். அமைச்சரவை மாறிக் கொண்டிருக்கிறதே தவிர, நாட்டின் சீரழிந்த போக்குமட்டும் மாறவில்லை. சனங்களின் க்யூ மாறவில்லை. பெற்றோலுக்கான வரிசை மாறவில்லை. அரசாங்கத்தின், ஆட்சியின் கொள்கை மாறவேயில்லை. அது இப்பொழுது தனக்கு எதிரான சதிகாரர் என்று மக்கள் போராட்டக்காரரைத் தேடிப்பிடித்துச் சிறையில் தள்ளுகிறது.

எது எதிர்பார்க்கப்பட்டதோ அதற்கு மாறாகவே நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

*ராஜபக்ஸக்கள் வேண்டாம் என்று ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், ராஜபக்ஸவினரை விரட்டியது உண்மைதான். ஆனால் அவர்கள் அசுரர்களைப் போல மாறு வேசத்தில் வேறு மாதிரியல்லவா வந்து நிற்கிறார்கள். ராஜபக்ஸக்களின் தோழராக, பாதுகாவலராக புதிய அவதாரம் எடுத்திருக்கிறார் ரணில். இதுதான் எதிரிக்கு எதிரி நண்பன் என்பது. வர்க்க நலன் என்று சும்மாவா சொன்னார் மார்க்ஸ். குளத்தைக் கலக்கிப் பருந்துக்குக் கொடுத்த கதையாகி விட்டது எல்லாம்.*

*இப்பொழுது பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வும் இல்லை. அரசியல் நெருக்கடிக்கு மாற்றமும் இல்லை என்றாகி விட்டது.*

*ரணில் ஒரு மாயக் குதிரை. அவர் ஒரு உலக நாயகன். அவர் ஒரு லிபரல் டெமோகிரட்டிஸ். ஆகவே அவர் ஆட்சிக்கு வந்தால் உலக அதிசயங்கள் நடக்கும் என்று சிலர் சொன்னார்கள். இப்பொழுது நடந்து கொண்டிருப்பதோ பெரிய மர்ம விளையாட்டுகள். இதனால் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, யப்பான் என்ற கூட்டணிகளும் கூட்டாளிகளும் முகத்தைச் சுழித்துக் கையை விரித்து விட்டன. "இலங்கையில் திருப்திகரமான ஆட்சி நடக்கவில்லை. அங்கே மனித உரிமைகள் செத்துக் கொண்டிருக்கின்றன. ஆட்சியில் உறுதியில்லை" என்ற குற்றப்பத்திரம் வேறு வாசிக்கப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில் இனி அடுத்து என்ன செய்வது என்று அரசாங்கம் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதைப் பற்றிச் சரியாகச் சிந்தித்தால் அதற்குரிய வேலைகளைச் சுலபமாகச் செய்து விடலாம். அதிகம் ஒன்றுமில்லை. சட்டங்களையும் நடைமுறைகளையும் சற்று மாற்றிப் புதிதாக அனைத்துத் தரப்பினருக்கும் இடத்தையும் பொறுப்புகளையும் வழங்கினால் எல்லாம் சரியாகத் தானாகவே இயங்கும். ஆனால் அதைச் செய்யத் தயாரில்லாத அரசாங்கம், வெற்றியில் இல்லாது விட்டாலும் தோல்வியின் பங்காளிகளாக எதிர்க்கட்சிகளையும் சேர்த்து விடலாம் என்ற நோக்கில் சர்வ கட்சி ஆட்சியை அமைப்பதற்கு அழைப்பு விடுத்திருக்கிறது. ஜனாதிபதியின் அழைப்பு மக்களுக்கான ஆட்சியை அமைப்பதற்கானதல்ல. தன்னைப் பாதுகாத்து, எதிர்த்தரப்புகளை அழிப்பதற்கான பொறி என்கின்றன எதிர்க்கட்சிகள். ஆக மொத்தத்தில் வேதாளம் முருங்கையை விட்டு இறங்கவே மாட்டேன் என்கிறது.*

*சனங்கள் வரலாறு முழுவதும் செய்த தவறுகளுக்காக மொத்தத்தில் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இனவாதத்தை ஆதரித்து வளர்த்ததன் விளைவு மொத்தமாக அனைவருக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், மலையக மக்கள் என்று எந்தப் பேதமும் இல்லாமல் அனைவரையும் ஆட்டிப்படைக்கிறது பொருளாதார நெருக்கடி, ஆட்சி அதிகாரம், மோசமான சட்டங்களும் அரச நடைமுறைகளும்.*

*ஆனாலும் இன்னும் யாரும் எங்கே தவறு நடந்தது? யாரெல்லாம் குற்றவாளிகள்? எப்படி இதிலிருந்து - இந்தப் பொறியிலிருந்து, இந்தப் படுகுழியிலிருந்து மீள்வது? என்பதைப்பற்றிச் சீரியஸாகச் சிந்திப்பதாகக் காண முடியவில்லை. எப்போது எண்ணெய்க்கப்பல் வரும்? எப்போது சாமான் கப்பல் வரும் என்றுதான் எதிர்பார்க்கிறார்கள். இறுதியில் இது யுத்தகாலத்தில் வணங்காமண் கப்பலை எதிர்பார்த்த - இழவு காத்த கிளியின் கதையாகத்தான் போய் முடியும். சர்வதேச சமூகம் உதவும். ஐ.எம்.எவ்வும் உலக வங்கியும் கடன் தரும். ஐ. நா. காப்பாற்றும் என்றே பலரும் கருதுகிறார்கள். தங்கள் சொந்தக் காலையும் சொந்தக்கையையும் நம்புவதற்கு யாரும் தயாரில்லை.*

*இதனால் இன்னும் ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு இலங்கைக்கு மீட்சியில்லை. அது மிக உக்கிரமான நெருக்கடிக்குள் சிக்கித்தான் பாடம் படிக்கப்போகிறது. பாராளுமன்றத்தில் நடக்கின்ற அரசியல் அமர்க்களம் தொடக்கம், வெளியே எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நடக்கின்ற அடிதடிகள் வரையில் இதையே நிரூபிக்கின்றன. தங்களைச் சுற்றி தீ பரவுவதையும் தலைக்கு மேலே வெள்ளம் ஏறுவதையும் தெரியாமல் நிற்கிற அரசாங்கமும் மக்களும் உள்ள நாடு வேறு எப்படி இருக்கும்?* □






*இலங்கையின் 7வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ச, கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.*

*நாட்டின் வரலாற்றில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ச வரலாற்றில் இடம் பிடித்திருந்தார்.*

*அதே போன்று தனது பதவிக்காலம் முடிவதற்குள் பதவியில் இருந்து விலகும் முதலாவது ஜனாதிபதியாகவும் கோட்டாபய ராஜபக்ச வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.*

*நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி மக்கள் போராட்டம் வெடித்தது. குறுகிய காலப்பகுதியில் மக்களின் வெறுப்பையும் அவர் பெற்றிருந்தார்.*

*இதன் ஒரு பகுதியாக கடந்த ஜூலை 9ம் திகதி ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்ட நிலையில், ஜனாதிபதி அங்கிருந்து வெளியேறியிருந்தார்.*

*தொடர்ந்து மக்கள் போராட்டம் தீவிரமடைந்த நிலையில், ஜூலை 13ம் திகதி பதவி விலகுவதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார்.*

*இதன்படி தனது பதவி விலகல் கடிதத்தில் கையெழுத்திட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, அதனை பாதுகாப்பு செயலாளர் ஊடாக சபாநாயகருக்கு ஜூலை 12 ஆம் திகதி அனுப்பி வைத்தார்.*

*2019 நவம்பர் 16ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், கோட்டாபய ராஜபக்ச 69 இலட்சத்து இருபத்து நான்காயிரத்து இருநூற்றி ஐம்பத்து ஐந்து (6.924,225) வாக்குகளையும் மொத்த வாக்கில் 52.25 சதவீத வாக்குகளையும் பெற்று நாட்டின் 7வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.*




*2019 நவம்பர் 18ம் திகதி அனுராதபுரம் ருவன்வெலி மஹாசாயா வளாகத்தில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் 7வது நிறைவேற்று ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ச பதவியேற்றார்.*

*கோட்டா, மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்புச் செயலாளராகவும் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கோட்டா நாட்டை விட்டு ஓடியதும் ரணில் பிரதமராகி, தற்காலிக ஜனாதிபதியானார்.*




*ஒரு வாரமாக பதில் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்ரமசிங்க மிக குறுகிய காலத்திலேயே மிகப்பெரிய வெற்றியை பதிவு செய்து, தன்னுடைய அரசியல் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை ஜனாதிபதி என்ற பெயரை பதிவு செய்துள்ளார்.*

*கடந்த பொதுத் தேர்தலில் வரலாறு காணாத வீழ்ச்சியை பதிவு செய்த ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து ஒரே ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை வைத்துக் கொண்டு நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்த ரணில் விக்ரமசிங்கவினால் என்ன மாற்றத்தை ஏற்படுத்தி விட முடியும் என எண்ணிய பலருக்கு பதில் ஜனாதிபதியாக ஒரு வாரம் நாட்டை ஆட்சி செய்த ரணிலின் வளர்ச்சியும், இலங்கையின் ஜனாதிபதியாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகோபித்த வாக்குகளின் மூலம் பதிவு செய்த வெற்றியும் பிரம்மிப்பாக இருக்கும்.*

*225 பேர் இருந்த நாடாளுமன்றில் தனியொருவராக இருந்து இன்றைய இலங்கை அரசியலில் பிதாமகனாகி ரணில் விக்ரமசிங்க உருவெடுத்தார்.*



ஜனாதிபதி ஆசனத்தில் அமர்வது ரணிலுக்கு பல வருடங்கள் கனவாகவே இருந்த நிலையில், பொதுத் தேர்தலில் பாரிய தோல்வியைச் சந்தித்து, தேசியப் பட்டியல் மூலம் கிடைத்த ஒரு ஆசனத்தை வைத்து ஜனாதிபதி என்ற இலக்கினை அடைந்துள்ளார்.

ரணில் ஜனாதிபதி கதிரைக்கு வந்ததும் Go Home Gota போராட்டக்காரர்களுக்கு தர்ம சங்கடத்தைக் கொடுத்து அவர்களை சேறு பூசிய நிலைக்கு கொண்டுவந்தார். இந்த செயற்பாட்டை ஏன் கோட்டா செய்யாமல் இருந்தார் என்ற கேள்விகள் இப்போது எல்லோருக்கும் எழுகிறது.

ஆனாலும் ஒரு சிறு துரும்பை பற்றிக்கொண்டு ஆட்சிக்கு வந்திருக்கும் ரணில் இலங்கையில் மாற்றங்களை செய்ய சூழல் சரியில்லை என்பதை அவரே கூறுவதை நாம் சில நாட்களில் கேட்கலாம்.

இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்க 134 என்ற பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று இலங்கையின் ஜனாதிபதியாக வந்துவிட்டார். ஆனால் ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் வரலாற்றில் பல தடவைகள் பிரதமராக பதவியேற்றிருந்த போதிலும், பல பதவிகளை வகித்திருந்த போதிலும் ஜனாதிபதி பதவி என்பது அவருக்கு எட்டாக்கனியாகவே இருந்தது.


ஆனால், பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பிரதமர் பதவியைப் பெற்றுக்கொண்டதையும் விட, பொதுத்தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டு கிடைத்த ஒரே-யொரு ஆசனத்தை வைத்து பிரதமராகி, இன்று இலங்கையின் ஜனாதிபதி என்ற தடத்தை ரணில் பதித்துள்ளார். □



கருத்துக்களம்

# உன்னால் முடியும் தம்பி தம்பி...

-சிவா முருகுப்பிள்ளை-



“நாட்டிற்குள் வந்தது யானை
அடுப்பிற்குள் புகுந்தது பூனை”
என்ற தோழர் மு. கார்த்திகேசனின் வாசகங்கள் என் நினைவில் வந்து போகின்றன.
இலங்கையின் ஜனாதிபதியாக பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்ரமசிங்காவின் தெரிவு ஜனநாயக விழுமியங்கள் வெட்கித் தலைகுனியும் செயற்பாடுகளில் ஒன்றாகவே உலக வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும்.
இரு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற இலங்கையின் பாராளுமன்றத் தேர்தலில் மக்களால் தோற்கடிகப்பட்டவரே ரணில் விக்கிரமசிங்க. அது மட்டுமல்ல அவரின் பழம் பெரும் கட்சி பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினரைக் கூட நேரடியாக மக்களால் தெரிவு செய்வதையும் உறுதிப்படுத்த முடியவில்லை.
இலங்கையின் தேர்தல் முறைமைப்படி நியமன பாராளுமன்ற உறுப்பினராக தன்னைத் தானே தெரிவு செய்து கொண்டவரே இந்த ரணில் விக்கரமசிங்க.

அப்படியான ஒருவரை கோத்தபாய ராஜபக்ஷ மக்களின் போராட்டங்களில் இருந்து தப்பிக் கொள்ள தனது சகோதரை பிரதமர் பதவியில் இருந்து இறக்கி, ரணிலுக்கு வழங்கிய பிரதமர் பதிவியே முதல் ஜனநாயக விரோத செய்யப்பாடாக போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் பார்கப்படுகின்றது.

மக்களால் முழுமையாக நிராகரிக்கப்பட்ட ஒருவரை எவ்வாறு நியமிக்கலாம் அப்படி நியாமித்தாலும் ஒரு சுய சிந்தனையுடன் செயற்படும் தார்மீக செயற்பாட்டை உடையவர் அதனை எவ்வாறு ஏற்றுக்கொண்டார் என்பதுவும் பல கேள்விகளை எழுப்பி இருந்தாலும், மக்கள் இது விடயத்தில் தெளிவாகத்தான் இருந்திருக்கின்றார்கள். அதனால்தான் கோ கம இல் ரணில் பெயரையும் உடனே இணைத்து மக்கள் போராடத் தொடங்கினர்.

போராட்டத்தின் வீரியம் கோத்தாவை நாட்டை விட்டு ஓடச் செய்து வெளி நாடு ஒன்றில் இருந்து தனது பதவியை இராஜனாமா செய்ய மீண்டும் அரசியல் யாப்பிற்கு அமைய இடைக்கால ஜனாதிபதியாக குந்திக் கொண்டார் மக்களால் நிராகரிக்கப்பட்ட அன்றைய பிரதமர் ரணில்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள் பாராளுமன்ற அந்த 200 சொச்சங்கள். இவர்களில் யாரும் இந்த கோ கம விற்கு ஆதரவாக மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கவில்லை. மாறாக உருவாகும் இடைக்கால ஆட்சியில் தமக்கு ஏதாவது வாய்ப்புகள் ஏற்படுமா என்பதை மட்டும் கருத்தில் கொண்டு செயற்பட்டனர். அல்லது அந்த வாய்ப்புகளைப் பெறுபவரிடம் தமக்கான சலுகைகள் அமைச்சுகளை முன் கதவால் அல்லது பின் கதவால் பெறலாமா என்பதில் மட்டும் குறியாக இருந்தனர். இதில் விரல் விட்டு எண்ணும் அளவிலான சிலர் விதிவிலக்காக இருக்கவும் முற்பட்டனர்.

பிரதமரான ரணில் இராஜினமாவிற்கு முன்பு கோத்தாவின் இராஜினமா நன்று திட்டமிடப்பட்டே நடைபெற்றது. ரணிலின் பிரதமர் பதவி இராஜினமாவிற்கு பின்பு கோத்தா இராஜினமா என்று

*சென்றிருந்தால் சபாநாயருக்கு ஜனாதிபதிப் பதவி தற்காலிகமாக சென்றிருக்கும். இதனைத் தடுப்பதற்கு ஏற்ப கோத்தாவுடன் இணைந்து அவரை பாதுகாப்பாக நாடுகள் விட்டு நாடுகள் போவதற்கு எல்லா வகையிலும் செய்பாடுகளை செய்தவர்தான் இந்த ரணில் விக்ரமசிங்க.*

*மக்களிடம் சென்று பெறமுடியாத அதிகாரத்தை குறுக்கு வழியில் பின்கதவால் பெற்றிருக்கும் இந்த கழுத்துப்பட்டி கோட் போட்ட கனவான் எந்தவகையிலும் சுய மரியாதையை உடையவர் என்று நாம் கருதி-விட முடியாது. அப்படியான ஒருவர் தற்போது நாட்டின் தலைவராக இருப்பதை இட்டு இலங்கையாராக நாம் வெட்கப்பட வேண்டி சூழலில் இருக்கின்றோம்.*

*சரி பாராளுமன்ற உறுப்பினர்களின் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவும் செய்யப்பட்டு ஜனாதிபதியாக இனிவரும் இறுதிக் காலம் வரை அரியணையும் ஏறிவிட்டார் ஜே.ஆரின் வாரிசு.*

*இந்த 200 சொச்சங்களையும் மக்கள் ஏலவே நிராகரித்த நிலையில் அவர்களின் தெரிவு மட்டும் எப்படி ஏற்புடையதாக இருக்கும்.*
*இதிலும் குறிப்பாக ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்து அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது சுயமரியாதை இழந்தவர்களாகவும், ஜனநாயக விழுமியங்களை, மக்களின் ஆணையை மீறிச் செயற் படுபவர்களாகவுமே நாம் பார்க்க முடியும்.*
*அப்போ அவருக்கு வாக்களிக்காதவர்கள் மட்டும் சுத்தமா...? என்றால் அதுவும் இல்லை. அவர்களும் ராஜபக்சகளின் விசுவாசியாக இன்று வரை செயற்படும் ஒருவருக்கு வாங்குவதை வாங்கிவிட்டு வாக்களித்தவர்கள் தான்.*

*மேலும் ஜனாதிபதி ரணிலின் தெரிவில் இருக்கும் மக்கள் நிராகரிப்பை ஏற்றுத்தான் அன்றும் இன்னமும் பாராளுமன்றத்தில் இவர்கள் தொடருவது ஒரு வகையில் எதிர்க் கட்சி என்று சொல்லிக் கொண்ட இந்த சிரிப்பிற்கிடமான அரசியல் செயற்பாடுகளை அங்கீகரிப்பது போன்றதாக பாரக்க முடியும்.*

*கூடவே ரணில் கடந்த "நல்லாட்சியில்" ராஜபக்சாகளை கழுவில் ஏற்றுவேன் என்று வாக்குறதி கொடுத்தே ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தவர். ஆனால் அவர் ஒன்றும் யாரையும் கழுவில் ஏற்றவில்லை. இப்போதும் இன்னும் அதிக விசுவாசமாக புதிய ஜனாதிபதியாக "நல்லாட்சியில்" செய்தனவற்றையே தொடருவார் என்பதுவும் சத்திய வாக்காக நாம் நம்பலாம்.*

*நாட்டை தேர்தல் வரை நடாத்திச் செல்லவும், தற்காலிகமாக ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல், கடன் பிரச்சனைகளை கையாளுவதற்கும் உரிய இடைக்கால அரசு இந்த 200 சொச்சத்தாலும் அதுவும் மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணிலை அரசுத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல.*

*இதனை பாராளுமன்ற நடைமுறை ஊடாக ஏற்றுக் கொண்டு செயற்படும் 200 சொச்சங்களும் ஏற்கனவே ஏற்பட்டது போல் மக்களின் நிராகரிப்பிற்கும் வெறுப்பிற்கும் உள்ளாகியே உள்ளனர்.*

*இதிலும் சிறப்பாக கொள்கை கோட்பாடு கட்சி என்பதை முழுவதுமதாக கைவிட்டு "தாவல்" செய்து மந்திரிப் பதவிகளும் அதிகாரங்களையும் பெற்றிருப்பவர்கள் எக்காலத்திலும் மக்கள் மன்றத்திற்கு வர முடியாத அளவிற்கு நிராகரிக்கப்பட வேண்டியவர்கள்.*
*இதனை எதிர்காலத்தில் மக்கள் செய்வார்கள் என்பதை வரலாறு நிரூபித்து நிற்கும். இதனால் தான் சொல்லுகின்றோம்.....*
*"உன்னால் முடியும் தம்பி தம்பி..." என்று.*

*இங்கு தமிழர் தரப்பு முஸ்லீம் தரப்பு மலையகத் தரப்பு சிங்களத் தரப்பு என்ற வேறுபாடுகள் இன்றி குதிரைப் பேரங்களும், ஆதரவுத் தாவல்களும், கொள்கை அற்ற அப்பட்டமான சுயநலங்களின் வெளிப்பாடாகவே பார்க்க முடியும். இலங்கையின் தற்போதைய ஆட்சி அதிகார ஜனநாயகத்திற்கு நாட்டின் தலைவர் ரணில் மட்டுமல்ல, ஏனைய 200சொச்சங்களும் வரலாற்றில் ஜனநாயக விரோதிகள், பதவி வெறிபிடித்து காட்டேரிகள் என்று குறிப்பில் நிச்சயம் இடம் பெறுவர். இடம்பெற வேண்டும்!*

*தமிழ் மக்களே இந்த ஜனாதிபதி இரகசிய வாக்கெடுப்பிலும் அதனைத் தொடர்ந்து அரச அமைச்சர் அவையிலும் தாவலாக இடம் மாறி தமது அமைச்சர் பதவிகளையும், சௌகரியங்களையும் பேணிப் பாதுகாத்து தொடர்ந்தும் அதிகாரக் கட்டிலில் ஒட்டிக் கொண்ட தமிழர் தரப்புகளை நிச்சயம் நீங்கள் இனம் காண்பீர்கள்.* □

அவர்கள் யாபேரையும் எந்த தயவு தாட்சயமும் இன்றி நிராகரியுங்கள் இவர்கள் எக்காலத்திலும் மக்களை தமது சுய நலன்களுக்காக காட்டிக் கொடுக்கும் ஜனநாயக விரோதிகள்.

இவர்கள் எந்த வேறுபாடுகள் இன்றி அனைத்து தமிழர் தரப்பிலும் இருப்பதை இப்போதாவது இனம் கண்டு கொண்டு செயற்படுங்கள்.
சிலர் நினைக்லாம் ராஜபக்சக்கள் இல்லாமல் புதிய ரணிலின் வருகை அல்லது வேறு ஒருவர் இந்த 200சொச்சதிற்குள் ஒருவரது வருகை எமது இலங்கையில் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான தலமைத்துவத்தை கொடுக்கும் என்று. அது இல்லவே இல்லை.

இந்த 200சொச்சங்களும் அவர்களை கடந்த காலங்களில் சரியாக இணம் கண்டு தெரிவு செய்யாத பொது மக்களுமாகிய நாமே இதற்கான பொறுப்புக்களை ஏற்று கொள்ள வேண்டும். அதற்கான போராட்மாகவே தற்போதைய போரட்டங்களை பார்க்க முடியும். இதன் அடிப்படையில் புதிய மக்களுக்கான தலைமை ஒன்றை உருவாக்குவோம்.

நேற்றுவரை கோத்தாவின் முகாமில், அரசில் அமைச்சரவையில் இருந்தவர்கள் இன்று ரணிலின் முகாமில். கடந்த அரசில் ரணில் நல்லாட்சியில் இணைந்தவர்கள் எதிர்கட்சி என்று நல்லாட்சியுடன கரம் கோர்த்தவர்கள் இன்று கோத்தாவின் மொட்டு டளஸ் அழகப்பெருமா இன் தேர்வுக்கான பேரம் பேசல்களில் அவர்களின் அணியில்.

போராட்டக்காரர்களை பாசிஸ்ட்டுகள் என்று ரணில் கூறுவதும் போராட்டக்காரர்களை பிரியாணி சாப்பிட்டுவிட்டு போராடுவபவர்கள் என்று கொச்சையாக கடந்து போவதையும் கேட்கும் போது, ஜேஆரின் ஆட்சியில் 1970களின் இறுதியில் ஜேஆர் இனால் வழங்கப்பட்ட தமிழருக்கான தீர்வான மாவட்ட சபைகளை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஏற்ற போது....,
தனி நாட்டிற்கான ஆங்கீகாரமாக தேர்தலை சந்தித்து விட்டு தேர்தல் வெற்றியைப் பெற்ற சில நாட்களில் ஜேஆரிடம் சோரம் போய் மாவட்டசபைகளை ஏற்ற போது அதனைக் கண்டித்து யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் கண்டனமும் கொடும்பாவி எரிப்பையும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கு எதிராக செய்து தமது அரசியல் நிலைப்பாட்டை மக்களின் உணர்வலைகளாக வெளிப்படுத்தினர்.

அதே காலத்தில் பாராளுமன்றத்தில் சிறில் மத்தியூ தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்கான களமாக விளங்கிய யாழ்பல்கலைக் கழகத்தை பார்த்து இங்கு படிப்பவர்கள் குதிரை ஓடி பல்கலைக் கழகம் சென்றவர்கள் என்று அடிக்கடி பொது வெளியிலும் பாராளுமன்றத்திலும் மாணவர்கள், மக்களின் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துவதற்கு கூறி வந்தார்.

இதனை ஆரம்பத்தில் எதிர்தவர்களில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரும் இருந்தனர் ஆனால் கொடும்பாவி எரிப்பின் பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முன்னால் அமைந்த குமாரசாமி வீதியில் ஒரு பொதுக் கூட்டத்தைப் போட்டு கருத்துக்களை கருத்துகளால் சந்திக்க திராணி அற்று தமது பிழையான அரசியல் செயற்பாடுகளை ஏற்க மறுத்து சிறில் மத்தியூ கூறிய "குதிரை ஓடி பல்கலைக் கழகம் வந்தவர்கள" பல்கலைக் கழக மாணவர்களை நோக்கி கருத்துகளைத் தெரிவித்தது கூட்டத்தின் பிரதான பேச்சாக இருந்தன. இதன் மூலம் தாங்கள் யார் என்ற உண்மை முகத்தையும் வெளிப்படுத்தி அம்பலப்பட்டும் போனர்.

இதனை இன்று எனக்கு காலி முகத் திடலில் போராடும் மாணவர்களை, இளைஞர்களை, மக்களைப் பார்த்து பிரியாணி சாப்பிடுவதாக கூறுவது ரணில் பாசிஸ்ட்டுகள் என்ற கருத்தை ஆதரிப்பதோடு மட்டும் அல்ல அன்று சிறில் மத்யூவின் பேச்சை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி பேசிய பேச்சுகளுக்கு ஒத்தாக என்னால் உணரமுடிகின்றது.

மக்களின் நியாயமான போராட்டங்களை கொச்சைப் படுத்தாதீர்கள். அவர்களை இனவாத அரசுகள் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை பயங்கரவாத பாசிச செயற்பாடகப் பார்த்தது போன்று விம்பங்களை ஏற்படுத்தாதீரகள். பலரும் போராட்டக்களத்தில் இருந்து வந்த அனுபவங்களை மறந்தும் விடாதீர்கள்.

மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்துபவர்களை வரலாறு ஒருபோதும் விடுதலை செய்யாது.

□




## வன்மம் என்பது சொல்லல்ல, தொடர்

மதத்தின் சாயம் பூசி
ஒட்டப்பட்ட சுவரொட்டிகள்
ஒவ்வொன்றாக தொட்டுப்பார்க்கிறேன்
டாவின்சியைப்போல
மறைத்து வைத்த சில சொற்கள்
தட்டுப்படுவதை
உணர்கின்றன என் விரல்கள்

கொதிக்கின்ற சொற்களின்
வெப்பம் தாங்காத விரல்களை
இழுத்து ஊதுகின்றேன்
நொடிப்பொழுதில் இறக்கைகளை பொருத்திக்கொண்டன
சில தணிக்கை செய்யப்பட்ட சொற்களும்
புனிதப்படுத்தப்பட்ட வசனங்களும்

ஒவ்வொன்றாக பிடித்து
வாசிக்கும் முன்னரே
பின்தொடர்ந்தபடி
விரைகின்றன சில கற்களும் தடிகளும்
ஒவ்வொன்றிலும் அப்பியிருக்கின்றன
நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட வன்மம்

நேற்று
துடிக்கத் துடிக்க நடுவீதிக்கு இழுத்துவந்து
உயிரோடு எரித்ததும்,
எண்பத்திமூன்றில்
ஓடும் பேருந்தை நிறுத்தி கொழுத்தியதும்
இப்போது ராஜாக்களின் கிரீடங்களை
கொழுத்திக்கொண்டிருப்பதும்
அதே வன்மம்தான்

## ஏவல் பேய்கள் குறித்து

ஏவல் பேய்கள் குறித்த
அம்மம்மாவின் கதைகள் யாவும்
கட்டுக்கதைகளென
சொல்லித்திரிந்த காலத்தில்தான்
நான்கு தெருவினையும்
ஒரு பெரும் சந்தியிலும்
தாழமரம் நிறைந்த களப்பிலும்
முதன்முதலாக
இரு முண்டங்களை சந்தித்தேன்

பருத்த இரு வெள்ளை முலைகளும்
யோனியும் சப்பப்பட்டு
வானத்தைப்பார்த்து மல்லாக்கக்க கிடந்த
வெற்றுடலை
களப்பும் கடலும் மாறிமாறி
புணர்ந்துகொண்டிருந்த
காட்சி என்கனவுகளில்
புகுந்து புகுந்து நினைவுகளில்
அப்படியே அப்பிக்கொண்டுவிட்டது

ஆழிசூழ் உலகில் இன்று
அம்மம்மா இல்லை
ஆனால் ஏவல்பேய்கள் இருக்கின்றன
மந்திரித்து விடப்பட்ட
ஒவ்வொரு ஏவல் பேய்களுக்கும்
வெவ்வேறு சீருடைகள்

## ஒரு காடேறியும் சில காடுகளும்

வனத்தின் பாடல்களை
ஒவ்வொன்றாக விரித்து
வாசித்துக்கொண்டிருந்தேன்.
கேட்டுக்கொண்டிருந்தவன்
இறுதி பாடலை வாசிப்பதற்குள்
என்னை சுற்றிலும் வனத்தை வரைய
ஆரம்பித்தான்.

அவனின் காட்டில்
சில மனிதர்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தார்கள்
இன்னும் சிலர் சமைத்துக்கொண்டிருந்தார்கள்
வெட்டிக் காய்ந்த மரக்குற்றியில்
தலையை சொறிந்தபடி
குந்திக்கொண்டிருந்தன
இரண்டு குரங்குகள்.
தூரத்தில் யானை ஒன்றிருந்ததைக் கண்டு
அதற்கு நெருக்கமாக போனேன்
கையைப்பிடித்து இழுத்த ஓவியன் சொன்னான் அதற்கு
மதம் பிடித்திருப்பதாக

கையை உதறிவிட்டு
இன்னும் நெருக்கமாக போனேன்
அது நீர் அருந்திக்கொண்டிருக்கும் நதி
கருஞ் சிவப்பாய் ஓடிக்கொண்டிருந்தது.
கால்களைக் கவனித்துவிட்டு
மிக அவசரமான குரலில்
டொக்டர் கிருஷ்ணமூர்த்தியை வரையச் சொன்னேன்
இது 2022 ம் ஆண்டு இப்போது சாத்தியமில்லை
என்று மறுத்துவிட்டார்

இருக்கும் யானைகளை காப்பாற்றியாக
ஓவியத்தில் உடைந்து கிடந்த
காலி போத்தல்களை கல்லாக மாற்ற கேட்டேன்.
அங்குமிங்குமாக கற்கள் குவிந்தன.

இப்போது உங்கள் கண்களுக்குள் ஓவியத்தை
சாத்தியமாக்கிவிட்டேன்
எல்லோரும் வெளியேறுங்கள்
காட்டை சாத்தியமாக்குவது குறித்து
யோசித்தாக வேண்டும்.

டணிஸ்கரன்
இலங்கை

## கலவரம் வரைபவன்

என் மீன்தொட்டிக்குள் இருந்து
அனுகும் சத்தம் கேட்டபடியே இருக்கிறது
நாட்பட்ட அனுகளுக்கு
தீன்பருக்கைகள் போதவில்லை

சிலரை அழைத்து
தீர்வுகாணும் பொறுப்பை ஒப்படைத்தேன்

வெறும் நான்கே மீன்கள்
நீந்தும் தொட்டியில்
ஒன்று மட்டும் வதைபடும் காட்சியை
முத்தங்களென சாட்சியம் செய்தார்
ஒரு புகைப்பட கலைஞன்

அவற்றின் ஒற்றுமை குறித்தும்
புரிந்துணர்வுகள் குறித்தும்
புதிய செய்திகளை வாசித்துக்கொண்டிருந்தார்
ஒரு பத்திரிகையாளன்

கலவரப்பட்டுக்கொண்டிருக்கும்
மீன்தொட்டியை அமைதியாக்க
இப்போது ஒரு கவிஞனைக் கேட்டேன்
அவன் ஓவியன் ஒருவனின்
காதுக்குள் ஏதோ ஓதிக்கொண்டிருந்தான்
அதற்குள்
மீன்தொட்டிக்குள் சில காகங்களை
வரைந்திருந்தான் அந்த ஓவியன்

இப்போது எனக்கு
இரண்டு காட்சிகள் புலனாகின்றன
ஒன்றில்
மீன்களை வேட்டையாடிக்கொண்டிருந்தன
சில காகங்கள்

மற்றொன்றில்
நீந்தப்பழகாத காகங்களை
தின்றுகொண்டிருந்தன மீன்கள்




மனோ

இருபத்தைந்து வருடங்களாக நான் பெரும் துயரைச் சுமந்துகொண்டிருக்கிறேன். என் கணவர் சிரித்து மகிழ்ந்ததை நான் கண்டதேயில்லை. அப்படித்தான் சிரித்தாலும் சம்பிரதாயத்திற்காக ஏதோ போலிக்குச் சிரித்து வைக்கிறார். வாழ்க்கை இவ்வாறானதொரு துயரை ஏன் எமக்குத் தரவேண்டும்?

எனக்கு மெதுமெதுவாக கடவுள் நம்பிக்கையும் அருகிக்கொண்டே வருகிறது
எனது கணவர் ஒரு நகைச்சுவைப்பேர்வழி. அவரது நகைச்சுவை உணர்வுக்காகவே அவரை நான் காதலித்தேன். எங்கள் வீட்டின் கடும் எதிர்ப்பையும் மீறி அவரை நான் கைப்பிடித்தேன். எங்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்க சில வருடங்கள் தாமதமாகின. நாங்கள் ஆரம்பத்தில் திட்டமிட்டே காலத்தைத் தவிர்த்தோம். அந்தக்காலம் மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தது. ஆனால், நண்பர்களும், உறவுகளும் எம் மகிழ்ச்சிகளைக் குறுக்காடினார்கள். அச்சமூட்டினார்கள். "அதது அந்தந்தக் காலததுக்கு நடக்கவேணும். பிறகு கஸ்ரம்" என்று எச்சரித்தார்கள். எங்களையும் பயம் மெதுவாய் ஆட்கொள்ளத் தொடங்கியது.
இப்போது நாங்கள் திட்டமிட்டபடி எதுவும் நடப்பதாய் இல்லை.
ஆளையாள் பார்த்து முழிசினோம். யாரில் குறை இருக்கிறது என்று எங்களால் கண்டறிய முடியவில்லை. கண்டடைய விரும்பவுமில்லை. என்மீது குறையிருப்பதை விட என் கணவர்மீது குறையிருப்பதை என்மனது ஏற்கத் தயங்கியது. அவருடைய மென்மையான உணர்வுக்கு இவ்வாறானதொரு தண்டனை கிடைத்துவிடக்கூடாதென நான் கடவுளை வேண்டினேன். இதே உணர்வுதான் அவருக்கும் இருந்ததை நான் உணர்ந்தேன்.

அச்சம் எங்களை அலக்கழித்தது. இல்லற வாழ்வின் இனிமையின் பயனாய் கிடைக்கவேண்டிய குழந்தைப் பாக்கியத்திற்காக நாங்கள் இயந்திரமாய் இயங்கினோம்.
எந்தப்பலனும் இல்லை. ஒரு கட்டத்தில் ரசிக்கவேண்டிய கட்டிலே எமக்கு வெறுத்தது. கட்டிலைப் பார்க்கும் போதெல்லாம் எரிச்சல் எரிச்சலாய் வந்தது.
நாங்கள் வேண்டாத கடவுள் இல்லை. காண்பவர் எல்லோரும் ஆலோசனை வழங்கினார்கள்.
அவர்களுடைய மிதமிஞ்சிய அனுதாப உணர்வு எங்களை அதிகம் வாட்டியது. எல்லோரும் மருத்துவர் ஆயினர். எல்லோரும் ஆலோசகர் ஆயினர். நாங்கள் நோயாளிகள் ஆனோம்.
பிரான்சிலும் தாராளமான மருத்துவ வசதிகள் ஆலோசனைகள் கிடைத்தன. விஞ்ஞானரீதியான விளக்கங்கள் பலவற்றையும் நாங்கள் உள்வாங்கிக்கொண்டோம். ஆனாலும் பலனில்லை. கடைசியில் கேரளா சென்று மருத்துவம் செய்வதாக முடிவு செய்தோம். காலநிலை மாற்றங்கள் கைகொடுக்கலாம் என்ற ஒருவித நப்பாசையும் எம்மிடம் இருந்தது.
இந்தியா பயணமாவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேளையில் எதிர்பாராத விதமாக நான் கர்ப்பமானேன். ஆனாலும் கர்ப்பமான மகிழ்ச்சியை என்னால் மட்டுமல்ல கணவராலும் கொண்டாட முடியவில்லை. முதல் இரண்டுதடவைகள் ஏமாந்தோம். மூன்றாவது மாதத்திலும், ஐந்தாவது மாதத்திலும் சிதைந்த கருக்கள் துர்க்னவுகளாய் எம்மை அச்சுறுத்தின.
இரண்டாவது சிதைவு என்னுடைய பொறுப்பற்றதனம் தான். வைத்த நேர்த்திக்காய் 108 படிகளை முழங்காலால் ஏறினேன். முழங்கால் வலியைவிட மனம் கட்டுக்கடங்காமல் வலித்தது.

பத்து மாதங்கள் மிகவும் பக்குவமாய் அச்சுதனைச் சுமந்தேன். என்னை என் கணவர் சுமந்தார். குழந்தை ஒரு குறையுமின்றி சாதாரணமாகவே வயிற்றுள் வளர்ந்தது. உரியகாலத்தில் அச்சுதன் பிறந்தான். பிறக்கும் தருணத்தில் அச்சுதனுக்கு ஒக்சிசன் போதாமலிருந்தது. நிறையவே போராடினேன். எழுத்தில் வர்ணிக்க முடியாத மரணப்போராட்டம் அது. வைத்தியர்களும் கூடவே போரடினார்கள். அச்சுதன் வீரிட்டுக்கத்தினான். எங்கள் முகங்கள் மலர்ந்தன. அருகில் பேயறைந்தவர்போல நின்றுகொண்டிருந்த கணவர் என் உச்சியில் முத்தமிட்டார். என் கன்னத்தில் அவர் கண்களில் திரையிட்டிருந்த ஒரு துளி விழுந்தது.

ஆரம்பத்தில் எமக்கு எதுவும் தெரியவில்லை. நாட்கள் செல்லச் செல்ல மருத்துவரின் முகம் சுருங்கி விரிந்தது. ஒக்சிசன் போராட்டத்தில் அச்சுதனின் மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டுவிட்டன.

அவன் ஒரு அசாதாரண குழந்தையாய் எங்களிடம் வந்து சேர்ந்தான். எங்கள் வலியை விட அச்சுதனின் எதிர்காலமும் அவனுடைய வலியுமே எங்களுக்குப் பிரதானமாய் தெரிந்தது.

மருத்துவரும் நாங்களுமாய் அலைந்தோம். மருத்துவர் அச்சுதனைவிட எங்களிலியே அதிக கவனம் செலுத்தினார். அச்சுதனின் பிரச்சினை தீர்க்கமுடியாத பிரச்சினை என்பதை அவர் உறுதிசெய்து கொண்டார். ஆனால் அச்சுதனால் எங்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாதென்பதில் அவர் அதிக அக்கறை காட்டினார். அடிக்கடி எங்களை அழைத்து உரையாடினார். மனத்தென்பை வரவழைக்க முயன்றார்.

நாங்கள் கொஞ்சம் தேறினோம். அச்சுதன் வெளிப்பார்வைக்கு சாதாரண குழந்தை போலவே தோன்றினான். நாட்கள் செல்லச்செல்ல அவன் மெதுமெதுவாக அசாதாரண நிலைக்கு மாறிக்கொண்டிருந்தான். அவனை சாதாரண பாடசாலையில் சேர்க்க முடியவில்லை.

அயலிலுள்ள அவன் வயதொத்த நண்பர்களுடன் அவன் விளையாட ஆசைப்பட்டான். புரிந்துகொண்ட பெற்றோர்கள் உதவினார்கள். புரியாதவர்கள் விலகினார்கள். பிள்ளைகள் இயல்பாகப் பழகினார்கள். எங்களுடைய நண்பர்கள் எங்கள்மீது அனுதாபம் காட்டினர். அது சில சமயங்களில் மிகையாகவும் எங்களை வருத்தவும் செய்தது. அவர்களது அனுதாபத்தின் பின்னே “அப்பாடா எங்களுக்கு இப்படியேதும் ஆகிவிடவில்லை” என்றொரு மெல்லிய புளாங்கிதம் ஒளிந்திருப்பதை என்னால் உணரமுடிந்தது. ஆனால் எங்கள் கவலை அச்சுதன் மேலேயே இருந்தது. “ஏன் நீங்கள் இன்னொரு பிள்ளைக்கு முயலக்கூடாது?” என்றும் சிலர் கேட்டு வைத்தனர். ஆலோசனை என்ற பெயரில் பலர் எங்களை வதைத்தெடுத்தார்கள். “எல்லாமே இறைவனின் படைப்பு. யார் யாருக்கு என்னென்ன பணிகளைக் கொடுக்கவேண்டும் என்பது அவருக்குத்தெரியும். இன்பமும் துன்பமும் இணைந்ததுதான் இயற்கை. இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட உயிர்களும் உலகில் வாழத்தான் வேண்டும். யார் பொருத்தமானவர்களோ யார் ஜீவகாருண்யம் மிக்கவர்களோ யார் தன்னுடைய உண்மையான மெய்யடியார்களோ அவர்களிடம் அச்சுதன் போன்ற குழந்தைகளை இறைவன் நம்பிக்கையோடு பாரம் கொடுக்கிறார். நீங்கள் ஒருவகையில் கொடுத்து வைத்தவர்கள்” என்று இவருடைய நண்பரொருவர் எங்களை ஆறுதல் படுத்தியபோது மனசு மெதுவாய் ஆறுதலடையத்தான் செய்தது.

வாழ்க்கை ஓரளவு எங்களுக்குப் பழகிவிட்டது. மனிதர்களையும் உலகையும் ஓரளவுக்கு நாங்கள் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டோம். எங்களால் முடிந்தளவுக்கு அச்சுதனுக்காக எங்கள் வாழ்வை சரிசெய்துகொண்டிருந்தோம்.

அச்சுதன் இடையிடையே உரத்துக் கத்தினான். சில வேளைகளில் எனக்கு அடித்தான்.

அவன் ஏதாவது அசாதாரணமாக நடந்து கொள்ளும் வேளைகளில் நாங்கள் அமைதி காக்கவேண்டி இருந்தது. இல்லையேல் அதிகம் எங்களைத் துன்புறுத்தினான்.

அச்சுதன் வெளியில் போக அதிகம் விரும்பினான். சிலவேளைகளில் அவனைக் கட்டுப்படுத்த முடியாமலிருக்கும். அதனால் நாங்கள் தயங்கினோம். சாதுர்யமாகத் தவிர்த்தோம். கொண்டாட்டங்களை அதிகம் அவன் விரும்பினான்.

இன்று எதிர்பாராதவிதமாக அவசர தேவையாக நான் போட்டோபிரதி எடுக்கவேண்டி இருந்தது. அருகிலிலுள்ள கடைதான். தானும் வருகிறேன் என்றான். அமைதியாக அழைத்துச்சென்றேன்.

கடையில் ஒரு இளம் யுவதி தனியாக இருந்தாள். இவன் யுவதியை ஆவேசமாக நெருங்கிகினான். அவள் வெருண்டோடினாள். இவன் மேசையின் மறுபுறத்தால் அவளைத் துரத்தினான். அவள் ஒரு மூலைக்குள் ஒடுங்கினாள். இவன் உரத்துச் சிரித்தான். பின் அமைதியானான்.

அவளுடன் கைகுலுக்க விரும்பி கைகளை அன்பாக நீட்டினான். அவள் அச்சத்தால் கைகள் உதறி உள்ளே இழுத்தாள். இவன் அவள் தன்னை அவமதிப்பதாய் உணர்ந்திருக்கவேண்டும். உரத்துக் கத்தினான். அவள் கைளை இழுத்து இறுக அழுத்தினான். அவள் வலியால் அலறினாள். அப்படியே சிறிது நேரம் அழுத்தியபடி வைத்திருந்த கைகளை பின் விடுவித்துக்கொண்டான்.

நான் அமைதியாக நின்று கொண்டிருந்தேன்.

அமைதி நிலவியது. யுவதி என்னை தாறுமாறாய் ஏசினாள்! ஆவேசமாய் திட்டினாள்

“உனக்குப் பொறுப்பிருக்கா? அறிவிருக்கா? அவன் என்னை ஏதாவது செய்திருந்தால்கூட நீ என்ன செய்துகொண்டிருந்திருப்பாய்? நீயும் ஒரு மனுஷியா?

நீ ஒரு பொறுப்பற்ற தாய். இரக்கமில்லாத ஒரு கொடிய பிசாசு”




Dr.விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist, Oslo, Norway)

*சிறி லங்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்யும் முன்பு நாங்கள் எவ்வாறான vaksin எடுக்க வேண்டும்?*

*வெளிநாடுகளில் நீண்டகாலம் வாழ்ந்துவருகின்றவர்கள் காலப்போக்கில் தாம் பெற்றிருந்த நோயெதிர்ப்புச் சக்தியை படிப்படியாக இழக்கநேரிடுவதால் இவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கு திரும்பும்போது அந்தந்த நாடுகளில் அதிகம் பரவக்கூடிய தொற்றுநோய்களுக்கெதிரான தடுப்பூசிகளை பெற்றுச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இங்கு நோர்வே சுகாதாரக்கட்டமைப்பினரால் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு பயணம் செய்கின்றவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் வருமாறு,*



1. MMR *(இத் தடுப்பூசிகள் அனைவரும் குழந்தைப் பருவத்தில் பெற்றுக் கொள்வது)*
2. DTP *(இத் தடுப்பூசிகள் அனைவரும் குழந்தைப் பருவத்தில் பெற்றுக் கொள்வது)*

இவை தவிர கட்டாயமாக பரிந்துரை செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகள்,
3. Hepatitis A
4. Polio vaccine
5. Thyphoid
பின்வரும் தடுப்பூசிகள் எடுத்துக்கொள்வதுபற்றி சிந்திக்க வேண்டும்
6. BCG, Japanese encephalitis, Hepatitis B, Rabies

இவை தவிரவும், பயணம் செய்யும் பகுதிகளைப் பொறுத்து மலேரியா தடுப்புமுறைகள் பற்றியும் கவனத்தில் எடுக்கவேண்டும் (மலேரியாவுக்கான தடுப்பூசி இல்லை, ஆனால் தடுப்புசக்தி வாய்ந்த குழிசைகளை முன்கூட்டியே எடுத்துக்கொள்ளலாம்)

எப்போது எடுக்க வேண்டும்?

இது வெவ்வேறு தடுப்பூசிகளுக்கு மாறுபடும், சில தடுப்பூசிகள் 2 -3 தடவைகள் போட்டுக்கொள்ள வேண்டும். எனவே பயண ஆயத்தங்கள் தொடங்கும் போதே (சில மாதங்கள்) உங்கள் குடும்ப வைத்தியருடன் ஆலோசிப்பது நலம். அத்துடன் குழந்தைகள், வயோதிபர்களுடன் பயணிப்பதாயின் அவர்களுக்கான விசேட பாதுகாப்புத் தொடர்பாகவும் கலந்தாலோசிக்க வேண்டும்.

கடந்த தடவை நான் நாட்டுக்கு சென்ற போது வயிறு குழம்பி மிகவும் கஷ்டப்பட்டேன். அது தவிர உடம்பு எல்லாம் ஒரே கடியாக (சொறிவு) இருந்தது. இவ்வாறு பல அசௌகரியங்கள் ஏற்பட்டது. இதற்கு நோர்வேயிலேயே மருந்துகள் எடுத்து செல்லலாமா?



திடீர் வயிற்றோட்டத்தை நிறுத்துவதற்கான குழிசைகளை இங்கிருந்து எடுத்துச் செல்வது வழமை, ஆனாலும் வயிற்றோட்டம் கட்டுப்படுத்தபடாவிட்டால் வைத்திய உதவியை நாடவேண்டும்.
உடம்பில் சொறிவு பல்வேறு காரணங்களால் ஏற்படும், ஒவ்வாமையே முக்கிய காரணமாக கருதப்படுகின்றது, ஒவ்வாமைக்கான காரணத்தை கண்டுபிடித்து அதிலிருந்து விலகியிருப்பதே சிறந்த மருத்துவமாகும்.

இப்போ குரங்கு அம்மை பரவல் பற்றி செய்திகள் வருகிறது. இந்த நோய் பற்றி....?

பெரியம்மை, சின்னம்மை போன்று குரங்கம்மை நோயும் வைரசுகளால் ஏற்படும் தொற்று நோயாகும். காய்ச்சல் மற்றும் உடலில் பருக்கள் போடுதல் என்பன நோய்க்குரிய அறிகுறிகளாகும். மனிதரிலிருந்து மனிதருக்கு பரவும் இந்நோய் தானாகவே மாறி-விடும். மற்றைய அம்மை நோய்களை போன்றே இதுவும் பரவாமலிருக்க தொற்றுக்குள்ளானவர்கள் தனிமைப்படுத்தப்படுவது சிறந்தது.

# இலங்கையில் பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வியல்

பாகம்-9

-ப்ரியமதா பயஸ்-

இலங்கையில் பெண்தலைமை குடும்பங்களின் வாழ்வியல் கல்வியை அடிப்படையாக கொண்டே பின்னடைப்பட்டு இருக்கிறது என்பது எவ்வளவு உண்மையோ அதுபோல அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களும் இன்றியமையாதது என்பதும் உண்மையாக உள்ளது .

பல்வேறு சுயதொழில் வாய்ப்புக்கள் நிறுவனங்களினாலும், அரசினாலும் வழங்கப்பட்டாலும் கூட, அவை தொடர்தேர்ச்சியாக அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவா, சரியான ஆய்வுகளின் அடிப்படையில் அத்தொழில் முயற்சிகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளனவா? குறித்த திட்டங்கள் மூலமாக அவர்கள் வாழ்வாதாரத்தை பெறுகின்றனரா என்பது தொடர்பான தொடர் செயற்பாடுகளை யாரும் செய்வதில்லை. கோழியை கொடுத்தோமா, மாடுகளை கொடுத்தோமா, காய்கறி நாற்றுகளை கொடுத்தோமா என கொடுத்துவிட்டு எல்லோரும் கிளம்பிவிடுகின்றனர் ஆனால் அதை வைத்து அவர்களால் பிழைக்க முடியுமா? அவர்களுக்கு அவற்றை பிரயோசனப்படுத்தும் அறிவு இருக்கா என்பது பற்றியெல்லாம் யாரும் கவலைப்படுவதே இல்லை .

அவர்களுக்கு கொடுக்கும் ஆடுகள், மாடுகள், சினைப்படுகின்றனவா? உரியகாலத்தில் பசுக்கள் கன்று ஈன்றால்த்தான் அவர்களுக்கு வருமானம் வரும் என்பதை மறந்து பசுக்களை வழங்கிவிட்டு சென்றுவிடுவார்கள்.

வழங்கப்படும் பசுக்கள் அவர்களின் வாழ்க்கைக்காலத்தில் கன்றே ஈனமுடியாத பசுக்களாகக்கூட இருந்ததை காணமுடிந்தது.

வெளிநாட்டில் இருக்கும் ஒருவரால் வழங்கப்படும் உதவி திட்டத்தை இங்கிருக்கும் ஒருவரை செயற்படுத்துவார், ஆடுகள் மாடுகளை எப்படி இருந்தாலும் கொள்வனவுசெய்து பெண்தலைமைக்குடும்பங்களுக்கு வழங்கிவிட்டு ஒரு புகைப்படத்தை எடுத்து உரியவர்களுக்கு வழங்கிவிட்டு தன் கடமை முடிந்தது என்று சிவனே என இறந்துவிடுவார், வாழ்க்கையில் எல்லா துயர்களையும் சுமக்கும் ஒரு விதவைப் பெண் கன்று ஈணாத பசுவை வைத்து அதையும் ஒரு சுமையாய் சுமந்ததை நான் கண்டு இருக்கிறேன். வெளிநாட்டுக் காரரின் திட்டங்களுக்கு நல்ல காசுக்கு விற்கலாம் என கன்று ஈணாத பசுக்களைக் கொள்ளை விலைக்கு விற்கும் நபர்களையும் நான் பார்த்து இருக்கிறேன். எனவே ஒரு வருமானத்திட்டத்துக்கு உதவி வழங்கும்போது அது ஆடாக இருக்கட்டும், மாடாக இருக்கட்டும் அது தொடர் வருமானத்துக்கு பொருத்தமானதா என உரிய முறைப்படி விலங்கு வைத்திய நிபுணர்களை அழைத்துப் பரிசோதித்து வழங்க வேண்டும் என்பதை உதவி வழங்கும் யாரும் கடைப்பிடிப்பதில்லை. இதனால் நடுத்தெருவில் நின்ற குடும்பங்கள் அப்படியே நடுத்தெருவில் இருந்துகொண்டதையும் நான் பார்த்து இருக்கிறேன்.



எனவே உதவி திட்டங்கள் வழங்கும்போது கரிசனையுடன் வழங்குவதை அனைவரும் கையாளவேண்டும் என்று இந்த தருணத்தில் வலியுறுத்துகின்றேன். இப்படி பிரயோசனமற்ற உதவிகளால் அவர்களின் வாழ்வாதாரம் இன்னமும் நெருக்கடிக்கு உள்ளாகும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும் - கன்று ஈண முடியாத பசுவை வருடக்கணக்கில் வைத்து இலவுகாத்தகிளியாக வளர்ப்பது என்பது இருக்கும் வரும்படியையும் இழக்கும் செயல்தான்,எனவே இவற்றை கணக்கில் எடுக்கவேண்டும் இதனால் அல்லலுறும் குடும்பங்கள் ஏராளமாகவே இருக்கின்றன.

இந்த பெண்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சரியான வழிகாட்டுதல்கள் இப்போதுவரை இல்லை என்பது மறுக்கமுடியாத உண்மை.

அவர்களின் உற்பத்திகளுக்கு சரியான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காமல் முதலீடுகளை செய்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து பல்வேறுபட்ட பிரச்சினைகளால் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். சுய தொழிலுக்கு சரியான சந்தை வாய்ப்பு சரியான நெறிப்படுத்தல் என்பது மிக முக்கியமானது, ஆகவே கிராமப்புறங்களில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு அவர்களது நலிவு தன்மைகளை விளங்கிக் கொண்டு வாழ்வாதார உதவிகளை வழங்காத நிலையில் அவர்கள் சட்டவிரோத தொழில்களுக்குள் செல்வதற்கும் வாய்ப்பாக அமைகின்றது.

தொடரும் .....

## அவ்ரோடிதா

*-தமயந்தி-*

துருவத்து நிலங்களெல்லாம்
இருளை எண்ணி
தவமாய் தவமிருந்தன.

கிறுக்குப் பிடித்த சூரியன்
இருளைத் தர மறுத்து
பூமியெங்கும் சுட்டெரித்தது.

அவ்ரோடிதா.
இளவரசி அவ்ரோடிதா.
கடலிலிருந்து எழுந்து வந்தாள்.

தனது தலையில் சூடியிருந்த
மரீன்றோஸ் மலர்க் கிரீடத்தில் வீற்றிருந்த
பிங்கி நிறப் பூவில் ஒன்றை
பிடுங்கி பூமியில் வீசினாள்.

இருளும் ஒளியுமான
அந்த மலர்
துருவத்து நிலங்களின் ஆசைகளை
சடாரெனத்தானே செய்து முடித்தது.

அவ்ரோடிதா!
இளவரசி அவ்ரோடிதா!
எனது நிலத்துக்கும்
பல கனவுகள் உண்டு இளவரசி!

# இருதயத்துக்குப் பட்சமானவள்

-தமயந்தி-



வெள்ளாப்புக் கினாவில்
கொஞ்ச நாளைக்குமுதல் தான்
கண்டேனவளை.
குஞ்சுக்கண்டி முனங்கோரம்
இறங்கித் திரிந்த பனிப்புகாரிடையே
முகிலுக்குள் திரியும் பிறைநிலாப் போல்
உலாத்தித் திரிந்தாள்.
சிறகுகள் பிடுங்கியெடுக்கப்பட்ட
மணிப்புறா அவளது வலது தோளில்.

கறுப்பும்
இடையிடையே
சாம்பல் நிறமும் கலந்த,
தையலற்று நெய்யப்பட்ட ஆடையை
அணிந்திருந்தாள்.
மிக விளப்பமுள்ள பொஸ்த்தகம் போல்
அவளின் முகத்திலுள்ள சோகத்தை
புகார் மண்டலத்திடையேயும்
வாசிக்கும்படிக்காய் இருந்தது.

பரிட்சயமுள்ள முகமாட்டம்
தெரிந்தாள்.

என்னிருதயம் முனகும் சத்தத்தை
இடையிடையே கேட்க முடிந்தது என்னால்.

ஷெரீனா.
1974.
முத்துச் சிலாவத்துறை.

நாற்பது வருசத்துக்கு முந்தி.
எனக்குப் பட்சமான சிறு பிராயச் சிநேகிதி.

தொண்ணூறிலிருந்து
அவளெங்கென்று அறிகிலேன்.
எந்தப் பொல்லாப்பும் அறியாத அவர்கள்
ஆணிவேரோடு பிடுங்கியெறியப் பட்டார்கள்.
ஆத்தாதவனாய்
அந்நியக் கரையிலிருந்து
யுத்தச் சங்கதிகளோடொரு சங்கதியாய்
அறிந்து கொண்டிருந்தேன்.

இது
எந்த யுத்தச் சாஸ்திரம் என்பது
இன்னும்தான் பிடிபடமாட்டேன் என்கிறது.

ஷெரீனா.
அவள்தான், அவளேதான்.
என் இருதயத்துக்குப் பட்சமான தோழி.
ஆனால்
குஞ்சுக்கண்டி முனங்கோரம்
இறங்கித் திரிந்தது பனிப்புகாரல்ல,
காஸா புகை மூட்டம்.

யுத்தங்கள் சாம்பலாய்ப்போக!

## மவுனத்தோடவள் காத்திருத்தல்...

-தமயந்தி-



தணுவில் முனங்கின்
வீச்சுளாத்தி மரங்கள்
முகையவிழ்த்த வாசனையை
செக்கல் சோளகம்
கரைநீளம் தூவிக்கொண்டிருந்தது.
அந்த மெல்லிய மாலையில்தான்
தோணியேறினேன்.

தலைகள் கொய்தெறியப்பட்ட
தணுவில் தென்னைகளை
தளநார் இல்லாமல்
ஏறிக்கொண்டிருந்தது
முகமுடைந்த நிலவு.

முனங்கை விட்டு
தோணி அகலுவதை
நிலவு
முகிற்புதருக்குள் மறைந்திருந்து
எட்டியெட்டிப் பார்த்ததை
நான் கண்டேன்.
அவளும்தான்.

முனங்குப் பாறையில்
இறுக்கிக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு,
அணையவந்த கள்ளத்தோணியில்
ஏற்றி அனுப்பி வைத்தாள்.

என்னை நானே
நாடு கடத்திக் கொண்ட நாள்த்தொட்டு
அவளது மவுனத்தின் குரல்கள்
வீச்சுளாத்திக் காற்றிலும் அலையிலுமாக
வந்துவந்து போம்.

இன்னுமவள்
முனங்குப் பாறையில்தான்
அமர்ந்திருக்கிறாள்
மீள வருவேனென்ற நினைப்பில்.

பூவும் பிஞ்சுமான
வீச்சுளாத்தி மரங்கள்
எல்லாமிழந்து
மடிவற்றி நிற்பதாக சொன்னது
அண்மையில்
தெருவில் நடந்த கொண்டல் காற்று.
மீண்டும் நான் வருவதாக
நம்புகிறாள் அவள்
என்றும் சொன்னது.

நானோ
வார்த்தை தவறிய கடன்காரனாக
ஈரத்தெரு நீளம் நடக்கிறேன்.

அதே நிலவு
இப்போதும், இங்கேயும்
முகிற்புதருக்குள் மறைந்திருந்தபடி
எட்டிப் பார்ப்பதைக் காண்கிறேன்.
அவளும்
அங்கிதைக் காணத் தவற மாட்டாள்.

# தாவீதுத்திறவு

-தமயந்தி.



தொடர்- பாகம் 1

*முப்பத்தியிரண்டு வருடங்களின்பின் 2018 செப்டெம்பர் 28இல் இலங்கைக்கு மீண்டும் புறப்படுகிறேன். புறப்படும்போது எந்தத் திட்டங்களும் முன்னேற்பாடாக இல்லை ஒன்றைத் தவிர. நான் சிறு வயதில் பார்த்து, கேட்டு இரசித்த கூத்துக் கலைஞர்களில் முடிந்தளவு சிலரையேனும் சந்தித்துப் பதிவாக்க வேண்டும் என்பது மட்டும்தான் கையோடும் பையோடும் கொண்டு சென்ற அந்தத் திட்டம்.*

*கடந்த கால்நூற்றாண்டுக்கும் மேலாக, அப்பப்போ ஊரிலிருந்து கிடைக்கும் மரணச் செய்திகளில் நிறையவே கூத்துக் கலைஞர்களின் மரணங்களையும் அறிந்து கொண்டுதானிருந்தேன். யுத்தத்தால் பாதியும், முதுமையால் மீதியுமென நல்லபெருங் கலைஞர்கள் செத்துப்போனதை அறியும் போதெல்லாம் ஒரு குற்றவுணர்வு முகத்தில் அறைந்து கொண்டேயிருந்தது.*

*கமெராவோடு நாட்டில் அலைந்த காலங்களில் இந்தக் கலைஞர்களைப் பதிவு செய்யும் வாய்ப்புக்கள் ஏராளமாக இருந்தும், அதை ஏன் செய்யத் தவறினேன் என்ற ஆதங்கம் அகத்தினுள் பிராண்டிக்கொண்டே இருந்தது.*

*ஆயினும் தொண்ணூறு வயதினைத் தாண்டியும் சிலர் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும், அவர்களைச் சந்தித்துவிடுவேன் என்ற நம்பிக்கையும் கணிசமான ஆறுதலைத் தந்தது.*

*அப்படி தனது தொண்ணூறாவது வயதை எட்டித்தொட்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் ஒருவர்தான் எங்களது பக்கத்துக் கிராமத்து அண்ணாவி தாவீதுத்திறவு. எழுபதுகளில் எனது சிறுவயதில் இவர் மேடையேற்றிய பல கூத்துக்களைப் பார்த்திருக்கிறேன். ஒன்றுவிடாமல்த் தவறாமல்ப் பார்த்திருக்கின்றேன். ஏனெனில் இவரது கூத்து மேடையேற்றங்கள் நடக்கும்போது எனது ஆச்சி கச்சான்கடை போடுவது வழக்கம். ஆச்சியோடு கூடவே நானும் போய்விடுவேன். கூத்துக்களை நெறிப்படுத்தும் அண்ணாவியாராக மட்டுமல்ல, பல கூத்துக்களில் பாத்திரமேற்றுப் பாடி நடித்துமிருக்கிறார். அந்த அரச உடைகளும், மணிகளும், மாளிகைக் காட்சிகளும், உச்ச எடுப்பான குரலும் நடிப்பும் இன்னமும் இரு கண்களுக்குள்ளும் இனித்துக் கொண்டுதான் இருக்கிறது.*

*செப்டெம்பர் முதலாம் திகதி காலையிலேயே தீவகத்துக்குச் சென்று அம்மாவைச் சந்தித்து விட்டு, மதியம் அண்ணாவி தாவீதுத்திறவு வீட்டுக்கு வந்துவிட்டேன்.*

-------------------------------------------

*2018. ஒக்டோபர் 1ஆம் திகதி, காலை 10மணி. பூதத்தம்பி கோட்டை, 2ம் ஒழுங்கை. அண்ணாவி தாவீதுத்திறவு வீட்டு முற்றத்து வேப்பமர நிழல். பழையதொரு சாய்ந்த பலகை நாற்காலியில் அண்ணாவியார்.*

*காரைநகர் கடற்படை தண்ணிப் பவுசரோடு வந்து சனங்களுக்கு சாட்டி மாதாங்கோயில் குடிதண்ணீர் கொடுத்துவிட்டுப் போன சிறிது நேரத்தில்.*
*அண்ணாவியார் வீட்டுப் பனைமட்டை வேலியில் இரண்டு கரட்டி ஓணான்கள். அதிலொன்று*

*நெருப்பாய்ச் சிவந்து பொம்மிய இரு மென்னைகளும், பருத்துச் சுருங்கும் தொண்டையுமாகவும், சிங்கத்தின் சிலிர்த்த முடிகள்போல் முள்ளங் கொம்புகளாகவும் திமிறித் தினவெடுத்து நின்றது. பழையேற்பாட்டில் சித்தரிக்கப்பட்ட தாவீது கோலியாத்து சண்டைக் கட்டத்தை "கோலியாத்தனே வாடா, கேடு செய்துடும் மூடா..." என அண்ணாவி அந்தோனி கூத்தில் யுத்தக்காட்சிப் பாடலில் எழுதியதுபோல நீண்ட நேரமாக ஒன்றையொன்று தனகிக் கொண்டிருந்த காட்சியையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு....*

*இரண்டுமணிநேரமாக அண்ணாவியாரோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு அதன் பின்புதான் எனது விருப்பத்தைச் சொன்னேன் அவரை வீடியோப் பதிவு செய்யும் ஆவல் உண்டென்பதை.*

*"என்னப் பதியப் போறியளோ தம்பி....? ஏதாவது பட்டப்படிப்புக் கிடிப்புப் படிக்கிறியளோ அப்பன்...?"*
*"இல்லையையா, ஏன் அப்பிடிக் கேட்கிறீங்கள்?"*
*"இல்ல.... ஏதாவது கம்பசு கிம்பசில படிக்கிறாக்கள்தான் இப்பிடி ஏதாவது பதிச்சுக் கொண்டுபோக வருவினம்.... அதுதான் கேட்டனான்"*
*"அப்பிடியெதுகும் இல்லயையா, சின்ன வயசில உங்கட நிறயக் கூத்துகளப் பாத்திருக்கிறன். உங்கட கூத்துகள் எனக்கு நல்ல விருப்பம்"*
*"ஓமோம், நான் எங்க சோடின போட்டாலும் உங்கட பேத்திக்காறி கச்சான் கடகத்தோட வந்திடுவா. ஒரு மேடயும் தவற விடமாட்டாள்பாவி, இந்த.... தொண்ணூறில தீவ விட்டு வெளி-யேறி யாழ்ப்பாணத்தில சோனகதெருவில இருந்தம். அவவும் மருதடி ஒழுங்கைக்குள்ளதான் வந்திருந்தவ. பிறகிட்டு அங்கயிருந்து கிளாலிக்கு ஓடினம். கிளாலியில உமையாள்தேவி எண்டு ஒரு கூத்து... பொம்பிளப் புள்ளயளுக்குப் பழக்கிப் போட்டனான். அந்த நாடகம் முடிஞ்ச கையோட மூணாம் நாள்தான் உங்க பேத்திக்காறி கண்ண மூடினவ. பிறகிட்டு அங்கயிருந்து தச்சனாமடுவுக்கு ஓடிப்போனம். அங்கயும் ஏலேலம்மா எண்டொரு கூத்த எழுதிச் சோடின போட்டனாங்கள். அதுக்குப்பிறகு தொண்ணூத்தேழில மடுமாதா கொடியிறங்கின கையோட மன்னாருக்குள்ளால மண்டபம் போனம். அங்கயும் அகதிமுகாமில ரெண்டு கூத்தெழுதி இளந்தரவளியக் கொண்டு சோடின போட்டம். இப்பிடிக் கூத்தோடயும், குஞ்சு குருமானுக-ளோடயும் இல்லாத பொல்லாத தேசமெல்லாம் ஓடியோடி ஓஞ்சுபோய்க் கிடக்கிறம். கூத்த விட்டு நாங்களும் பிரிஞ்சதில்ல, கூத்தும் எங்கள விட்டுப் போனதில்ல. கூத்தின்ர கடப்படியில நாங்கள் நாய்களாகவும், இந்த நாய்களின்ர இருதயத்துக்குள்ள கூத்து சாமியாகவும் இருக்குதப்பன்.*

*காணுமடி மாதாவேயெண்டு, போய்ச்சேர்ர காலத்த வா வா எண்டாலும் அது வருகுதில்ல.... நாமென்ன செய்யிறது.... இப்பிடி உங்களப்போல கூத்தில நாட்டமுள்ள பிள்ளயளப் பாக்கவேணுமெண்ட குடுப்பனவு இருந்திருக்குப்போல... அதுதான்...."*

---

*"ஐயா இப்ப பாடுங்க ஐயா...."*
*"சரியா தம்பி....? இப்ப பாடலாமா?"*
*"ஓம், கமெரா ஓடுது பாடுங்கையா."*
*"சரி பாடப்போறன், வடிவாப் பதிஞ்சுபோடுங்க தம்பி."*
*"ம் ம் பாடுங்கையா...."*

*"காடே பெருங்காடே*
*ஈடே இல்லாத எந்தன்*
*கோடையாம் மாடப் புறா- சொந்த*
*கூடே அகன்றாளே*
*தேடுகிறேன் அவளை*
*காடே நீ கண்டனையோ*
*கண்டால் ஒரு கணமே- அண்ணன்*
*வாடுதல் சொல்வாயோ*

நிப்பாடிப்போட்டு ஒருக்காப் பாருங்க ராசா சரியாப் பதிஞ்சிருக்கா எண்டு.”
“அதெல்லாஞ் சரியையா.”
“எற்பன் போட்டுக் காட்டுங்கப்பன்.”

Rewind, play

காடே பெருங்காடே
ஈடே இல்லாத எந்தன்
கோடையாம் மாடப் புறா- சொந்த
கூடே அகன்றாளே
தேடுகிறேன் அவளை
காடே நீ கண்டனையோ
கண்டால் ஒரு கணமே- அண்ணன்
வாடுதல் சொல்வாயோ
“சளிப்பிடிச்ச தரவளி பாடுறதுமாதிரிக் கிடக்குது தம்பி”
“இல்லையையா, இது கமெராஸ்பீக்கர் அப்பிடித்தான் இருக்கும். ஒறிஜினல் ரிவியில சரியா வந்திடும்”
“சரிதம்பி, மோசமில்ல, எண்டாலும் கிணத்துக்ககிடந்து கத்தினமாதிரி... ஒரு தகரச்சத்தமாக் கிடக்கு.

இது வந்து தம்பி நான் ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி நாப்பத்தெட்டாம் வருசம் எழுதி மேடயேத்தின அன்பலங்காரி நாடகம் ராசா. அப்ப எனக்கு இருவது வயசு. அன்பலங்காரி நாடகத்தில வாற பாட்டுத்தான் இப்ப நான் பாடினது. இந்த நாடகத்தப் பாத்தபிறகுதான் எங்கட பெரியம்மான் தன்ர மூத்தமகளச் சடங்கு கட்டித் தந்தவர். எங்கட பெரியம்மானக் கேள்விப் பட்டிருக்கிறியளோ தம்பி...? அண்ணாவி எம்பரதோர் சூசைமுத்து எண்டால் இந்தச் சுத்துவட்டாரத்தில இருக்கிற பதினெட்டு ஊருக்கும் தெரியும். இந்தப் பிரதேசம் முழுக்க அவர்தான் தலைச்சன் அண்ணாவி. அவரட்ட படாத அடியெல்லாம் பட்டுத்தான் எங்கதரவளி நாடகம் பழகினனாங்கள். நாலுமுளப் பூவரசங்கம்ப நெருப்பில காய்ச்சித்தான் கொண்டுவருவார் நாடகப் பழக்கத்துக்கு. அப்பேக்க பெரியமாதாங் கோயில்ல இருந்த மேற்றாணியாண்டவர் அல்பிறேட்டு குயோமர் அவர் ஆள்விட்டுக் கூப்பிடுவிச்சு அச்சேஸ்ரவர் கதைகளச் சொல்லச் சொல்ல நாடகமா எழுதின மனுசன். அப்ப நாங்கெல்லாம் இளவட்டத் தரவளியள்.

நீங்கள் கேள்விப் பட்டியளோ தெரியாது.... அண்ணாவி சூரன் அருளப்பன், அண்ணாவி ராவணத்தம்பி, அடுத்தது... இவர்தான்... அந்த... பனவளவு பதஞ்சொல்லி குஞ்சர்.... இவயளெல்லாம் எங்கம்மானட்ட அடிவாங்கி நாடகம் படிச்சாக்கள்தான். பதஞ்சொல்லி குஞ்சருக்குக் கண்டமுமில்ல, சுதியுமில்ல, தாளமுங் கிடயாது. முறிமுயெண்டு முறிப்பான்பாவி.

பிறகிட்டு குஞ்சன் கரயூரில சிஸ்ரர்மாரின்ர புள்ளப்பெறு ஆஸ்ப்பத்திரியில மருத்துவிச்சியாயிருந்த பறங்கிப் புள்ளயச் சடங்கு கட்டி அலுப்பாந்தியடிக்குப் போனபிறகு றேடியோவில பாட்டுப் படிச்சுப் பெரியாளாப் போனார். இப்ப என்னடாண்டால் குஞ்சன்தான் கூத்த நட்டு எருப்போட்டு, தண்ணியூத்தி வளத்தவரெண்டு கதைக்கிறாங்கள். சிரிப்புத்தான் வருகுது.”
“அவர் பெரிய அண்ணாவியாரெல்லோ ஐயா?”
“ஓமோம்...., பெரிய நீள அகலமான அண்ணாவிதான் ராசா அவர். ஆறில்லாத ஊரில அடிக்கழுவுற குசவன் குண்டுதான் அமுதசுரப்பியாம்”
“ஐயா, நீங்கள் நாடகம் எண்டு சொல்லுறது கூத்தைதானேயையா....?”
“பின்ன...? இப்பயெல்லோ உங்கதரவளிக்குக் கூத்து வேற நாடகம் வேற”
“சரி ஐயா, நீங்கள் எத்தின கூத்து எழுதியிருக்கிறீங்கள்?”
“நான் கனக்க எழுதயில்லயப்பன். இத்தனைக்கும் ஒரு... ஒரு, பத்துப் பன்ரெண்டு நாடகந்தான் எழுதியிருப்பன். அம்மான் எழுதிவச்ச கொப்பியளத்தான் கனக்கச் சோடின போட்டனான். அவற்ற பாட்டுகளுக்குக் கிட்ட எந்த விண்ணனும் நிக்கேலாது. கூத்துவாசின இல்லாத கொஞ்சப்பேர் நாகமுத்தப்பாவின்ர தேங்காவத்தயில இந்தியாவுக்கு அடைஞ்சுபோய் நாடகக்கொட்டக

*பளகிப்போட்டு வந்து அந்தப்படிக்கே கொண்டுவந்து அவங்கட கொப்பியளப் போட்டிச்சினம். அதுதான் கூத்தெண்டும் சொல்லிச்சினம் கொஞ்சப்பேர். பிறகிட்டு கூத்துத் தெரிஞ்சவனும் இந்தியாவுக்குப்போய் கரிநாடக சங்கீதம் பழகிப்போட்டு வந்து எங்கட கூத்துப் பாட்டுகள ஒரு சத்தாருக்கு இழுத்து கனச்சுக் கனச்சுப் பாடிச்சினம். என்னடாண்டால் புதும செய்கினமாம். எல்லாங் கரிநாடகமாக் கிடந்துது"*

*"ஐயா எங்களின்ர கலைகள நவீனமாக்கி, புதுமைகளச் சேர்க்கிறது நல்லதுதானே ஐயா?"*

*இஞ்ச வாங்கோ ராசா, கூத்து அப்பப்ப கனக்க மாத்தல்களையும், புதுசு புதுசாப் புதுமயளயுஞ் செய்துகொண்டுதான் அப்பன் வந்திருக்கு.... எங்கட பேரன் பூட்டன் காலத்தில ஆடின கூத்துகளயும், எங்கட காலத்தில போட்ட சோடினயளயும், எங்கட பிள்ளயளின்ர காலத்தில ஏத்திற நாடகங்களையும் வடிவா அறிஞ்சு பாத்தீங்களெண்டால் தெரியும் தம்பி. கூத்தெண்டு சொல்லிச்சொன்னால் அது கீழ்சாதியளின்ர குப்பயெண்டு அந்தக்காலத்தில சொன்னாக்கள்தான் இப்ப வந்து தங்களுக்குத் தெரிஞ்ச எதயெதயெல்லாமோ சொருகிப்போட்டு, கூத்துக்குப் புதும செய்யினமாம். பாசி பிடிச்சுக் கிடந்த கூத்துக்கு கலப்பத்தடிச்சுத் தூக்கிச் சாத்தி நிமித்துகினமாம். சொல்லுவாருக்குச் சொன்னால், கேட்பாருக்கு மதியில்லையாம். எங்கட அப்பன் பாட்டான் பூட்டன் செய்யாத புதுமயளா? அந்தக்காலத்தில கண்டந்தூக்கிப் பாடினாங்களெண்டால் எட்டூருக்கு இடிமுழக்கமாப் போய்விழும். இப்ப எவனுக்குக் குரலிருக்கு...? மைக்குக்கு முன்னால நிண்டு அனுங்கிறாங்கள். கேட்டால், அந்தக்காலத்தில சும்மா சும்மா கத்தின்னாங்களாம். அது பிழயாம். மைக் இல்லாத காலத்தில சுதிலயம் பிசகாமல், தாளக்கட்டுக்குள்ள நிண்டு, குரலெடுத்துத்தான் பாடவேணுமெண்ட அறிவுகூட இல்லாதாக்கள நாமென்ன சொல்லுறது? கூத்துவாசன தெரியாதவைக்கு அது கத்தலாத்தான் தெரியும் தம்பி. அதில இருக்கிற சூட்சுமம், கனிவு, லாவகம் இதெல்லாம் இவைக்கு விளங்காது. காத்தடி கடலடியில மடிவலத்தோணி அணியத்தில நிண்டு மண்டாடி அம்பாப் பாடினால் ஒருகட்டைக்கங்கால கயித்துத் தோணியில நிக்கிற கயித்துக்காறன் பதில்ப்பாட்டுப் பாடுவான். சத்தந்தான் சனங்கள எங்களட்ட அள்ளுகொள்ளயா வரப்பண்ணினது. குரலெடுத்துக் கொலுத்தருப் படிச்சால் அது போய் மேகத்தில இடிச்சு மழ வரவேணும் ராசா. வரும், அப்பிடி வந்த காலங்கள்தான் எங்கட அப்பன் பேரன்ர காலங்கள்"*

*அண்ணாவி தாவீதுத்திறவு எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் சிரித்தபடியே இவற்றைச் சொல்லிக் கொண்டிருப்பதுபோல் தெரிந்தாலும், உண்மை அதுவல்ல..... அவரினுள்ளே ஒருவித கோபமும், கவலையும் இருந்ததுதான்.*

*"ஐயா, ஒரு கேள்வி. இப்ப நீங்கள் முதல்ப் பாடின பாட்டு பேராசிரியர் கற்பகவிநாயகம் விசுவலிங்கத்தார் எண்பதுகளில எழுதின கூத்திலதானேயையா?"*

*"................................"*

*"நல்ல எடுப்பான கதைதான் ராசா ஆனால்த் தடிப்பமில்ல" இது வீட்டுக்குள்ளிருந்து வந்து வெளியே எட்டிப் பார்த்த அண்ணாவி தாவீதுத்திறவாரின் மனைவி மகிறம்மா ஆச்சியின் குரல். அப்போதுதான் புரிந்தது மகிறம்மா ஆச்சி எங்களது உரையாடலை உள்ளிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார் என்பது.*

*"ஒரு கேள்வி ஐயா, இதக் கேட்கலாமோ தெரியேல்ல....., அன்பலங்காரி கூத்துப் பிரதி பேராசிரியர் கற்பகவிநாயகம் விசுவலிங்கத்தார் எழுதி எண்பதுகளில அரங்கேற்றினதாத்தான் கேள்விப்படுகிறம். ஆனால் நீங்கள் நாப்பத்தெட்டில எழுதின கூத்தெண்டு சொல்லுறீங்கள்..... அதப்பற்றிக் கொஞ்சம் சொல்லேலுமோ ஐயா?"*
*தாவீதுத்திறவு அண்ணாவியார் கதிரையில் சாய்ந்தபடியே வேப்பமர உச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார் சிறிது நேரம். பின் தொண்டையைச் செருமி, சொல்லவேண்டிய சொற்களைத் தனக்குள் அடுக்கிச் சரிசெய்தவராக என்னைப் பார்த்தார்.*

*"படாது தம்பி, சொல்லப் படாது. இதுகளச் சொல்லவே படாது. நான் சொல்லுறதில*

*ஏதெண்டாலும் ஒரு எற்பன் தப்பித்தவறிச் சமுகசந்திக்கு வருமாகுப்பட்டால் அந்த மனுசனுக்குச் சங்கையீனமாப் போயிடும். அது அழகில்லத் தம்பி. எண்டாலும் நாங்க பாக்க மேய்க்க அயலட்டையில வளந்த பிள்ள ராசா நீங்க. காமேந்து பண்ணுவீங்கள்தானே? இதப் பதிஞ்சுகிதிஞ்சு போடாதேங்க அந்த மெசின நிப்பாட்டுங்க முதல்ல"*

*"இல்லையையா, அது கமெரா ஓடேல்ல. நீங்க விரும்பினால்ச் சொல்லுங்கோ"*

*"அப்பேக்க.... அது வந்து அப்பன் எண்பத்தெட்டோ, எண்பத்தொன்பதிலயாயிருக்க வேணும்.... எங்கட கோயில்ப்பெருநாளுக்கு ஒரு கூத்துச் சோடின கட்டலாமெண்டு நினைச்சு இந்த அன்பலங்காரி கூத்த எடுத்து இளம்பிள்ளயளுக்குப் பழக்கிக் கொண்டிருந்தனான். அந்தமூட்டந்தான் இந்த மாஸ்ரர் தன்ர ஏதோ பட்டப்படிப்புக்கெண்டு யாழ்ப்பாணத்தில இருந்து கூத்துகளப் பற்றிக் கேட்டறிஞ்சுகொண்டுபோக வந்தவர். வந்த இடத்தில.... இந்த இந்தமாதிரி அன்பலங்காரி கூத்துச் சோடின கட்டப்போறம் எண்டதக் கேள்விப்பட்ட மனுசன், கூத்து மேடயேறுமட்டும் தானும் இதில வந்து என்னோட இருந்து கூத்தப் பாக்கப்போறதாகவும், கூத்து விசயங்கள இன்னும் அறிஞ்சுகொண்டுபோகத் தோதா இருக்குமெண்டும் கேட்டார். நானுஞ் சந்தோசமாச் சரி எண்டன்.*

*கிழமைக்குக் கிழம ஒவொரு பழக்கத்துக்கும் யாழ்ப்பாணத்திலயிருந்து பஸ் பிடிச்சு வந்து போவார். அப்பிடி வரேக்க சுடுதண்ணிப்போத்தல்ல கோப்பித்தண்ணியுங் கட்டுச்சாதமுங் கை-யோட கொண்டுவருவார். எங்கவீட்டில பச்சத்தண்ணியும் பல்லில போடார். இது என்ர மனிசிக்காறிக்குக் கடுமயான ஆத்திரம். ஆனா வெளியில காட்டிக்கொள்ள மாட்டாள்பாவி. ரெண்டொரு தடவ தின்னக் குடிக்கக் கேட்டுப்பாத்தாள்.... அவர் சங்கடங்காட்டினார் அதோட விட்டிட்டாள். நமக்குத் தெரியுந்தானே தம்பி இந்த நடப்புகள் மேய்ப்புகள் என்ன ஏதெண்டு. சோடினயண்டு நாலைஞ்சு பெரியபெரிய வாத்திமாரயெல்லாங் கூட்டிக்கொண்டு வந்தார். கூத்து முடியிறவர கூத்துக்கொட்டகயில என்னோட பக்கத்திலதான் நிக்க வச்சனான். தானும் கைத்தாளம் போடப்போறன் எண்டு கேட்டார். ஒரு சின்னக் கைத்தாளத்தக் குடுத்துப்போட்டுச் சொன்னன், இதக் கையில வச்சிருங்கோ மாஸ்ரர், தாளம் போடாதேங்கோ எண்டு. ஏனெண்டால் தாளத்தின்ர ஆனாவே இவருக்குத் தெரியாது தம்பி. மேடயில பிழயாக்கிழயாப் போட்டாரெண்டால் வீண் பிசகாகிப் போயிருமெல்லோ, அதுதான்.*

*கூத்து முடியச் சாமம் தாண்டிப்போச்சு. அதுக்குப் பிறகு எங்கட இந்த வீட்டிலதான் வந்த வாத்தியார்மாரெல்லாருக்குஞ் சாப்பாடு. அண்டு நிறைய நல்ல கணவாய்க்கறி. சட்டியோட தூக்கிவச்சு வெளுத்துக் கட்டினாம்பாவி, என்ர பெண்சாதிக்காறிக்கு அடக்கமாட்டாச் சிரிப்பு" சொல்லிவிட்டு தானும் பெரிதாகச் சிரித்துக் கொண்டார்.*

*"பின்னடிக்குத்தான் தம்பி கேள்விப்பட்டன் ராசா..... அந்தக் கூத்த தான்தான் போட்டதெண்டு சொல்லித் திரிஞ்சாராம் வாத்தி. நாமென்னத்தப் பறயிறது. இதால நமக்கென்ன கேடு வந்தது... பேசாமல் விட்டிட்டன். இதோட நீங்களும் விட்டுப்போடுங்க தம்பி. அடுத்தாப்புல இன்னொரு பகிடி என்னடாண்டால்...., இப்ப, அஞ்சு வருசத்துக்குமுந்தி என்ர பேரமக்கள், பூட்டமக்களெல்லாங் கூடிப்பறஞ்சு என்ர எண்பத்தஞ்சாவது வயச வலுசிறப்பாக் கொண்டாடிச்சினம். என்னப்பற்றிப் பொஸ்தகமெல்லாம் பதிப்பிச்சு, நான் எழுதின சின்னக் கூத்தொண்டும் சும்மா சோடினகீடின இல்லாமல்ப் போட்டு, ஊர்ச்சனத்தயும் கூப்பிடுவிச்சு கொண்டாடிச்சினம். அந்தப் பொஸ்தகத்தில போடுறதுக்கு ஒரு நாலு வார்த்த எழுதித் தரச்சொல்லி அந்த வாத்திட்டப் போய்க் கேட்டிச்சினமாம். தனக்கு என்னத் தெரியவே தெரியாதெண்டு பிலாத்து கணக்காக் கை விரிச்சுப் போட்டாராம். இந்த விண்ணாணக் கதயப் பிள்ளயள் என்னட்ட முதல்ல சொல்லேல்ல. பின்னடிக்குத்தான் கதயோட கதயாக் கேள்விப்பட்டன்"*

*மட்டைவேலியின்மேல் தனகிக்கொண்டு நின்ற ஓணான்களில் அந்தக் கொம்புகள் சிலிர்த்த கோலியாத்து ஓணானைக் காணவில்லை. தாவீது ஓணான் மட்டும் தனியனாய், சற்றுத் தள்ளி நின்ற ஊசித் தும்பியொன்றைப் பிடித்து விடுவதற்கு வளம் பார்த்துக்கொண்டு நின்றது.*

தொடரும் ---------------

# புகைமூட்டம் விலகிய ஆஸ்ப்பத்திரி வீதி

-யூலியஸ் அன்ரனி-

எப்போதும் வாகனங்கள் நிறைந்து காணப்படும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதி இதுதான்.

கரிநிறப்புகையை வெளிவிட்டு செல்லும் அதிகமான வாகன நெரிசல்களே இந்த வீதியில் இரவும் பகலுமாகக் காணப்படுவதுண்டு. இந்தப் பகுதியை நாம் கடந்து செல்வதற்குள் வாகனப் புகையால் வயிறுமுட்டி, மூச்சடங்கி விடுவோம்.

பெற்றோல், டீசல் தட்டுப்பாட்டினால் இன்று அதிமுக்கிய போக்குவரத்துக்களை மட்டுமே தாங்கியவண்ணம் மிகவும் அமைதியாக நகர்கிறது இந்த நாட்கள்.

“பெற்றோல், டீசல் தட்டுப்பாடு நமது சுற்றுப்புறச் சூழலை மாசடைவிலிருந்தும், அளவுக்கதிகமான சாலை விபத்துக்களிலிருந்தும் கொஞ்சமேனும் காப்பது மகிழ்வை அளிக்கிறது” என சுற்றுப்புறச் சூழல் அனுதாபிகள் மவுனமாக முணுமுணுப்பதும் நமக்குக் கேட்கத்தான் செய்கிறது.




படம்: யூலியஸ் அன்ரனி




## பதிவு-1

*நேற்றையதினம் (17 ஜுன். 2022) சென்னை விமானநிலையத்தில் எனது தொலைபேசிக்குள் சிக்கிக்கொண்ட சிறபங்களுள் ஒன்று.*



*25 நாட்களும் 25 மணிநேரங்களாக கடந்து சென்றன. கொரோனாவுக்குப் பின்னான இந்தப் பயணம் பல நல்ல அனுபவங்களைத்தந்தது. பல சின்னட்டிக்கதைகளையும், தன்னகத்தே பதிவு செய்துகொண்டது. நிச்சயம் தேன் தமிழ் வாசகர்களொடு பகிர்ந்து கொள்ள முயல்கிறேன்.*

*சென்னையில் நின்ற ஒரு சில தினங்களில் இரண்டு திரைப்படங்களையும் பார்க்க முடிந்தது. பலராலும் பாராட்டப்பட்ட, வசூலில் சாதனை படைத்த அந்தப்படத்தை என்னால் ரசிக்க முடியவில்லை. சினிமாவை ரசிக்க எனக்குத் தெரியாமலுமிருக்கலாம்! படம் முழுவதும் வன்முறை. இரத்தம் திரையையும் கிழித்தபடி என்னைச் சீண்டியது. இதை எப்படி பலராலும் ரசிக்கமுடிந்தது என்பது எனக்குள் இன்னும் ஆச்சரியம் தான்.*

*இதை மறப்பதற்காக இன்னொரு படம் பார்த்தேன். சார்லி. அருமையான படம். கன்னடப் படத்தை தமிழில் "டப்" செய்திருந்தார்கள்.*



*தனிமையாகப்பட்ட மனிதனுடன் எதிர்பாராது உறவாடும் ஒரு தெருநாயின் கதை. அன்பு, அந்த மனிதனை எப்படி மாற்றிப் போடுகிறது! கொஞ்சம் சுருக்கியிருக்கலாம்தான். ஆனாலும் பார்க்கக்கூடிய படம்.*
*பார்க்காதவர்கள் பாருங்கள்!*
*"இந்தக் கலியுகத்தில் நீங்களும் தர்மராசாக்களாகலாம்!" அன்பு செய்!*
*மனிதர் உணர்ந்து கொள்ள இது மனிதக்காதல் அல்ல. அல்ல...அல்ல!!!*

## பதிவு - 2



நேரம் மதியம் 1மணி. உச்சிவெய்யில். எனது கிராமத்து நெடுஞ்சாலையொன்றில் சைக்கிள் மிதித்துக்கொண்டிருந்தேன். எதிரே ஒரு வயோதிபர். அவரது சைக்கிளின் பின்புறம் கத்திகள் மற்றும் இரும்புப் பொருட்கள் சாணைபிடிக்கும் இயந்திரம் கட்டப்பட்டிருந்தது. சைக்கிளை மிதிக்கமுடியாது மிதித்துக்கொண்டிருந்தார். அவரை உற்றுக் கவனித்தேன். எனக்கு நன்றாகவே தெரிந்த மனிதர். அவர் என்னைக் கவனிக்கவில்லை. தன்பாட்டிற்குப் போய்கொண்டிருந்தார்.

நான் அவரைக் கூப்பிட்டிருக்கலாம்! ஏன் தயங்கினேன்! தெரியவில்லை!! ஆனாலும் என்னால் தொடர்ந்து பயணிக்க முடியவில்லை. அவரைக்கடந்து ஐம்பது மீற்றருக்கு மேல் தாண்டியிருப்பேன். மனதுக்குக் கஸ்ரமாக இருந்தது. சைக்கிளை மடக்கித் திருப்பி அவரைநோக்கி வேகமானேன்.

அவர் சாதாரண வேகத்தில் போய்க்கொண்டிருந்தார். சற்றுக் கடுமையான போராட்டம்தான். அவரை நெருங்கிவிட்டேன்.

“நீங்கள் சிறீநாதன் தானே?” என்றேன்.

“ஓம்” என்றார். பதிலில் அக்கறை இருக்கவில்லை.

“என்னைத் தெரியுதா?” என்றேன்.
அப்போதும் அக்கறை இருக்கவில்லை.

திரும்பவும் கேட்டேன். “நீங்கள் சிறீநாதன் தானே?”
“ஓம்” என்றார்.

நான் புன்னகைத்தபடி “சைக்கிளை அங்காலை இணலுக்குள்ள நிப்பாட்டுங்கோ” என்றேன். பூட்டப்பட்டிருந்த கடையொன்றின் முன்னால் ஒரு மரநிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு இறங்கினார்.

திரும்பவும் கேட்டேன்.
“என்னைத் தெரியேல்லையா?”

“கொஞ்சமும் நினைவுக்கு வரேல்ல” என்றார்.

“நான் உங்களோட மூன்றாம் வகுப்பும் நாலாம் வகுப்பும் படிச்சனான்” என்றேன்.

“எங்கை அருணோதயாவிலேயோ” என்றார்.

“ஓம். இண்டைக்கு ஐம்பது வருசத்துக்கு மேல” என்று சிரித்தேன்.

“என்னை இவ்வளவு ஞாபகம் வைச்சிருக்கிறயள்!” என்று அவரும் பதிலுக்குச் சிரித்தார்.

என்னுடைய வீட்டுக்கு மூன்று வீடுகள் தள்ளித்தான் அவருடைய வீடு இருந்தது. அவருடைய வீட்டுக்கெல்லாம் சென்று விளையாடியிருக்கிறேன். எப்படி நினைவு படுத்தியும் அவரால் என்னை நினைவுக்கு கொண்டு வரமுடியவில்லை.

சிறுவயதிலேயே அவர் அசாதாரண திறமைசாலியாக இருந்தார். கைவினைப் பணிகளிலும், தொழில் நுட்பத்திலும் அவருக்கு அதிக ஈடுபாடு இருந்தது. மூன்றாம் வகுப்பிலேயே அருகிலுள்ள காளிகோயிலுக்கு மலர்ச்சிகரம் செய்து அதை மின்விளக்குகளால் அலங்கரித்து என்னை ஆச்சரியப்படுத்தினார்.

ஆண்டு நான்கு. சாரதாமணிரீச்சர் எங்கள் வகுப்பாசிரியர். மாதத்தில் ஓர் நாள் கடைசிப்பாடவேளை மாணவர் அரங்கு. நான் மாணவர் தலைவர். ஆசிரியர் கதிரையில் வெட்கப்பட்டபடி அமர்ந்திருக்கிறேன்.

நாடகம் ஒன்று செய்யும்படி ரீச்சர் கேட்க, நாங்கள் எல்லோரும் முழிசிக் கொண்டிருக்கிறோம். சிறீநாதன் ஓம் என்று துணிந்து முன்வருகிறார். பிரதி, பயிற்சி எதுவும் கிடையாது. சிறீநாதன் நாலுபேரைத் தெரிவு செய்தார். அதில் முதலாவது ஆள் நான்தான். வகுப்பறைக்கு பின்னுக்கு மறைவாக எங்களை அழைத்தார். பாடப்புத்தகத்தில் ஒரு கதையைத் தேர்வு செய்தார். விறகுக் குச்சிகளை பொறுக்கி வந்தார்.

ஒவ்வொன்றாக முறிக்கச்சொன்னார்.
இலகுவாக முறிந்தது.
பின் எல்லாவற்றையும் சேர்த்துக்கட்டியபின் முறிக்கச்சொன்னார்.
முடியவில்லை.
“ஒற்றுமையே பலம்” என்றார். எல்லோரும் கைதட்டினார்கள்.
சாரதாமணி ரீச்சர் பாராட்டினார்.

சிறீநாதனிடம் இருந்த ஆற்றலுக்கும், விடாமுயற்சிக்கும் அவர் எங்கேயோ போயிருக்க வேண்டியவர். இப்போதும் அவர் ஒன்றும் குறைந்து போய்விடவில்லை.
சாணை பிடிக்கும் இயந்திரம் ஒன்றை தனக்கேற்றாற்போல் வடிவமைத்து வீட்டில் வைத்து செயற்பட்டு வருகிறார்.
இரண்டு பிள்ளைகள். படித்து வேலை செய்வதாகச் சொன்னார். மனைவி பிள்ளகைளுடன் மகிழ்ச்சியாக இருக்கிறார்.
ஆனாலும், அவருக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று என்மனது துருதுருத்தது.

“நீங்கள் பிழையா எடுக்கப்படாது. ஐம்பது வருசத்துக்குப்பிறகு உங்களைச் சந்திக்கிறன் என்று தயங்கியபடி அவரது சட்டைப்பையினுள் ஒரு தாளைத் திணித்தேன்.
“ஐயோ நீங்கள் என்னை ஞாபகம் வைச்சிருக்கிறதே பெரிய விசயம்...” என்று அவர் சிரித்தார். தயங்கினார்.


என்னுடைய அன்பளிப்பை ஏற்க மறுத்தார்.
நான் வலுக்கட்டாயமாக மன்றாடினேன்.






*1983இல் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையின் நினைவாக இதுவரை காலமும் நாம் அனுஷ்டித்துவந்த "கறுப்பு ஜூலை" துக்கதினத்தை இந்த ஆண்டு சிங்கள மக்களும், தென்னிலங்கை முற்போக்கு அமைப்புக்களும், மாணவர்கள், இளைஞர் கூட்டமைப்புக்களும் தென்பகுதியில் மும்மொழிகளிலும் ஏராளமான சுவரொட்டிகளையும், பதாகைகளையும், துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டும், காட்சிப் படுத்தியும் நினைவு கூர்ந்ததை நாம் ஒரு மிக முக்கிய வரலாற்று நிகழ்வாகவே பார்க்க முடியும். அது மட்டுமல்லாமல், இதுவரை காலமும் இலங்கைப் பேரினவாத அரசுகள் அனைத்துத் தரப்பு மக்களையும் பிரித்து வைக்கும் நோக்கில் திட்டமிட்டு சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டுவந்த இனவெறிப் பிரச்சார நடவடிக்கைகளுக்கு இந்த நினைவுதின நிகழ்வானது ஒரு முற்றுப்புள்ளியை வைப்பதான அறி-குறியை நமக்குக் காட்டி நிற்கிறது.*

*இனவாதத்தைத் தனியே சிங்கள அரசுகள்தான் சிங்களமக்கள் மத்தியில் ஊட்டி வருகின்றன என்றில்லை. தமிழ்த்தரப்புத் தலைமைகளும் கடந்த காலங்களில் சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களை தமிழ் மக்கள் மத்தியில் விதைத்து வந்தார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களும் இவர்களும் தமது அதிகாரங்களையும், பதவிகளையும் தக்க வைத்துக்கொள்ள இந்த விளையாட்டுக்களைத் தொடர்ந்து செய்யத்தான் போகிறார்கள். எனவே இலங்கைத்தீவின் எல்லாத்தரப்பு மக்களும் மிகக் கவனமாக இருக்க வேண்டிய காலம் இது என்பதை நெஞ்சிருத்தியாக வேண்டும்.*

*-தமயந்தி-*











Sinnataggen

Benjamin 4år




Min familie. Pappa, mamma og meg

Mira 3,5 år



Pappa Gris

Lumina 4 år



Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN 2703-8440